எழிலுறு காட்சிகளுடன் அழகுறப் படம் பிடித்திட விஜயம் செய்யுங்கள்

அஜந்தா போட்டோ

63, சங்கிலியன் வீதி, (முத்திரைச் சந்தையடி) நல்லூர்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்களகரமான நிகழ்ச்சிகளை நினைவெனத் தங்கிட வீடியோ படம்பிடித்திட

அஜந்தா வீடியோ

63, சங்கிலியன் வீதி, (முத்திரைச் சந்தையடி) நல்லூர்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 13 திங்கட்கிழமை (29 - 08 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 275

# பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா முட்டுக்கட்டை!

## விசேட படகு சேவை இன்று

யாழ்ப்பாணம், ஓக. 29

கிளாலி-பூநகரி விசேட படகுச் சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

## அமைச்சர்கள் நியமனம் பற்றி எம்.பிக்கள் சிலர் அதிருப்தி!

கொழும்பு, ஓக. 29

அமைச்சர்கள் நியமனம் செய்யப்பட்ட விதம் குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சில எம்.பிக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகச் சொல்லப்படுகிறது.

அவர்களில் ஒருவர் கம்பஹா மாவட்டத்தைச்சேர்ந்த எம்.பியான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தமது அதிருப்தியை பிரதமரை நேரிற்சந்தித்து தெரிவித்துக் கொண்டார் என்று கூறப்பட்டது.

கண்டி மாவட்ட எம்.பியான எச்.பி. கிரியெல்ல, மாத்தறை மாவட்ட எம்.பியான மஹிந்த விஜேசேகரா, கேகாலை மாவட்ட எம்.பியான எஸ்.டி. ஆர். ஜயரத்னா ஆகியோரும் அதிருப்தி அடைந்தவர்களில் அடங்குகின்றனர்.

பொ.ஐ.மு. எதிரணியில் இருந்தபோது செயல்பட்ட 'நிழல் அமைச்சரவை' யில் தாம் சேர்க்கப்பட்டிருந்ததை இந்த எம்.பிக்கள் பிரதமருக்கு நினைவுபடுத்தியுள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் தங்களின் பங்களிப்பு தற்போது அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ள சி.வி.குணரத்ன, நிமால் சிறிபால டி சில்வா, இங்கிலி விக்கிரமரத்ன, ரிச்சர்ட் பதிரான ஆகியோருக்குக் குறைந்ததல்ல என்றும் இவர்கள் தெரிவித்தனர்.

இடையிடையில் —

அமைச்சர் பதவி கிடைக்காத வாசுதேவ நாணயக்காரா, பிரதி அமைச்சர் பதவியை தாம் ஏற்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார் என்று அதிகாரபூர்வ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா கடற்படையின் கட்டளைப் பீடத்தில் மாற்றம்

கொழும்பு, ஓக. 29

இலங்கைக் கடற்படை உயர் கட்டளைப் பீடத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கடற்படைத் தலைமை நிர்வாக அதிகாரி ரியர் அட்மிரல் சிசில் திஸ்ஸேரா பாகிஸ்தானில் பயிற்சியை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதை அடுத்து இம்மாற்றங்கள் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் பதில் தலைமை நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய ரியர் அட்மிரல் ரி.சே. திஸ்ஸநாயக்கா கிழக்கு கட்டளைப் பீடத்தளபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

வடபிராந்திய கட்டளைப் பீட பொறுப்பதிகாரியாக கொமொடோர் எச். ஆர். அமரவீராவும் —

வட பிராந்திய கட்டளைப் பீட பொறுப்பதிகாரியாக இதுவரை கடமையாற்றிய கொமொடோர் ஜே. ரி ஜேசுந்தரம் மேற்குப் பிராந்திய கட்டளைப் பீட பொறுப்பதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்-

தெற்கு பிராந்தியக் கட்டளைப்பீடப் பொறுப்பதிகாரியாக ஏ.எச்.எம். ரஸீக் நியமிக்கப்பட்டார்.

மூன்று துணைக்கட்டளைப் பீடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கப்டன் டி.எஸ்.எம். விஜேவிக்கிரம வட பிராந்தியத்துக்கும் —

கப்டன் டபிள்யு. சே. ஜேகரணகொட மேற்குப் பிராந்தியத்துக்கும் —

கப்டன் எஸ்.பி.எப். விஜேரத்ன கிழக்குப் பிராந்தியத்துக்கும் துணைப்பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-எ)

## ஆயிரம் ஆணைக்குழுக்களை எதிர்கொள்ள காமினி தயார்!

### லஞ்ச விசாரணை பற்றிய கேள்விக்கு அவர் தந்த பதில்

கொழும்பு, ஓக. 29

ஆயிரம் ஆணைக்குழுக்களையும் எதிர்நோக்கத் தாம் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

முன்னணி அரசு விரைவில் அமைக்கவிருக்கும் லஞ்ச ஆணைக்குழு முன் நீங்களும் ஆஜராக்கப்படலாம் என்று நம்பப்படுகிறதே என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கே காமினி திஸநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருமதி சிறிமாவோவின் அரசியல் உரிமையை பறிக்க முற்பட்டபோது நான் அதனை அன்று கடுமையாக எதிர்த்தேன். ஏனெனில் அன்று ஐக்கிய தேசியக் கட்சி ய எதிர்த்தோரை அரசியல் அரங்கில் இருந்து அகற்றி விடுவதே அக்கட்சியின் செயற்பாடாக இருந்தது.

உண்மைக்குப் புறம்பான, அநீதியான குற்றம் என் மீது சோடிக்கப்பட்டுள்ளது.

நான் எந்தச் சவாலையும் எதிர்நோக்கத் தயாராக உள்ளேன்

—இவ்வாறு அவர் கூறினார். (உ-எ)

## ஜனாதிபதி முறையை நீக்க ஐ.தே.கவில் ஒரு சாரார் ஆதரவு

கொழும்பு, ஓக. 29

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கு எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சியைச் சேர்ந்த ஒரு சாரார் ஆதரவு அளிக்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலம் தேவையென்பதால் —

ஐ.தே.கவின் ஆதரவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கேட்டுள்ளது.

ஐ.தே.கவின் ஒரு சாரார் இந்த திருத்தத்துக்கு ஆதரவு வழங்க முன் வந்துள்ளதாகவும் —

மறுசாரார் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் காமினி திஸநாயக்கா கருத்துத் தெரிவிக்கையில் —

எங்களில் ஒருசாரார் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு ஆதரவு வழங்க முன் வந்துள்ளனர். எனினும் இது தொடர்பாக கட்சி கூடி முடிவு செய்யும் என்றார். [உ-3]

## சர்வசன வாக்கெடுப்பு நடத்தாமல் ஆட்சி முறையை மாற்ற முடியாது!

கொழும்பு, ஓக. 29

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு ஆதரவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பெற்றுக்கொண்டாலும் —

சர்வஜன வாக்கெடுப்புமூலம் மக்களின் அனுமதியைப் பெறாது அந்த ஆட்சி முறையை மாற்ற முடியாது

அரசியல் நிபுணர்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் ஆட்சி முறையை நீக்குவதாயின் அதற்கான அரசமைப்புத் திருத்தம் ஒன்று கொண்டுவரப்படவேண்டும்.

அத்தகைய திருத்தம் ஒன்றைக் கொண்டுவரும் முயற்சியில் புதிய அரசு ஈடுபட்டுள்ளது.

ஆனால் இத்தகைய திருத்தம் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்குச் செல்லும் போது —

அது மக்களின் [illegible] மற்றும் வாக்[illegible] டன் சம்ப[illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



சாமி இடம் குடுத்தாலும் பூசாரி இடம் குடுக்காத கதை மாதிரி எல்லோ இருக்குது உது...!

## அரசின் முடிவை செயற்படுத்த தடை போடுகின்றார் டி.பி.

கொழும்பு, ஓகஸ்ட் 29

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை உடனடியாக நீக்குவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு விரும்புகின்ற போதிலும் —

பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி விஜேதுங்க அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் முட்டுக்கட்டையும் போடுவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

ஏ.எவ்.பி. செய்தியாளர் அமல் ஜயசிங்காவை மேற்கோள்காட்டி பி.பி.ஸி. தமிழ்ச்சேவை இத்தகவலை வெளியிட்டது.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை உடனடியாக நீக்கி அங்கு தாராளமாக பொருள்களை அனுப்பவும் —

வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை ஏனைய இடங்களுக்கு விற்பனை செய்யவும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் பாணின் விலை 3ரூபா 50 சதமாகக் குறைப்பு

### பருப்பின் விலை கிலோ 22 ரூபா

கொழும்பு, ஓக. 29

பாண், மா ஆகியவற்றின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டிருப்பதாக கொழும்பு அரசு நேற்று அறிவித்தது.

இதன்படி ஒரு றாத்தல் (450 கிராம்) பாணின் விலை 3 ரூபா 50 சதமாக இருக்கும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு கிலோ மா 6 ரூபா 65 சதத்துக்கு விற்கப்படும். இதுவரை அமுலில் இருந்த விலை 11 ரூபாவாகும்.

இதுவரை காலமும் பேக்கரி உரிமையாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் கிலோ 11 ரூபா 25 சதத்துக்கு விற்கப்பட்ட மா இனிமேல் அவர்களுக்கு 7 ரூபாவுக்கு விற்கப்படும்.

பாண் 3 ரூபா 50 சதத்துக்கு விற்கப்படும் என பொதுமக்கள் ஐக்கிய முன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்குக்கு என விசேட அவசரகாலச் சட்டம்

கொழும்பு, ஓக. 29

பொதுத்தேர்தலை அடுத்து ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் அடுத்த மாதம் 4 ஆம் திகதியுடன் காலாவதியானாலும் வடக்கு-கிழக்குக்குமட்டும் பொருந்தும் வகையில் அவசரகாலச் சட்டம் புதிய பிரகடனம் மூலம் கொண்டு வரப்படலாம்:

வெளிநாட்டு வர்த்தக, நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தமது அமைச்சில் வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### அடுத்த ஆண்டு முதல்

## பல்கலைக்கழகங்களுக்கு கூடுதல் மாணவர் அனுமதி

கொழும்பு, ஓக. 29

பல்கலைக்கழகங்களுக்கு அடுத்த ஆண்டு கூடுதல் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பாடசாலைகளுக்கு வருடம் ஒன்றுக்கு 3 லட்சத்து 90 ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். தற்போது அவர்களில் 9 ஆயிரத்து 200 மாணவர்களே வருடம் ஒன்றுக்கு பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### ஆட்சி மாறினும், மாற்றமடையாத

## நிரந்தர கல்வித்திட்டம் புதிய அரசு வகுக்கும்

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 29

ஆட்சி மாறினாலும், நாட்டின் கல்விக்கொள்கை எதிர்காலத்தில் மாற்றப்படாத விதத்தில் புதிய கல்விக்கொள்கையை வகுக்கப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பதிரான இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அரசியல் கட்சிகள், தேசிய கல்வி ஆணைக்குழு ஆகியவற்றின் கருத்துக்களும்; மதப்பிரமுகர்கள், பல்கலைக்கழகங்களின் தலைவர்கள், கல்வித்துறை நிபுணர்கள் மற்றும் கல்விமான்களின் யோசனைகளும் இது தொடர்பாகப் பெறப்படும் என்றும் -

அவற்றின் அடிப்படையி[illegible]

நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு தேவையான விதத்தில் பல்கலைக்கழக நெறிகளும் மாற்றியமைக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ-4)

### வடக்கு- கிழக்கு பகுதியில்

## உஷார் நிலையில் இருக்க படையினருக்கு உத்தரவு!

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள படையினரை எந்நேரமும் உஷார் நிலையில் இருக்குமாறு பாதுகாப்புத் தலைமையகம் உத்தரவிட்டுள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக படையினருக்கு எதிராக எந்த விதமான தாக்குதல்களையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளின் இந்த மௌனம் படையினருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. படையினருக்கு எதிரான பாரிய தாக்குதலை மேற்கொள்ளவதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் செய்துவரக் கூடும் எனவே படையினர் எந்நேரமும் தயாராக உஷார் நிலையில் இருக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் 'திவயின' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-9]

## ஜனாதிபதித் தேர்தலில ஜே.வி.பி. தலைவர் போட்டி

### முற்போக்கு முன்னணி அறிவிப்பு

கொழும்பு ஓக. 29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி வேட்பாளராக ஜே.வி.பியின் தற்போதைய தலைவரான சோமவன்ஸ அமரசிங்க போட்டியிடுவார்

கட்சித் தலைவர் ஒருவரை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கடந்த தேர்தலுக்கு முன்பு இலங்கை வரத் திட்டமிட்டிருந்த அமரசிங்கா, தாம் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாக நாடு திரும்பும் திட்டத்தை கைவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் அவர் நாட்டில் இருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முற்போக்கு முன்னணி கடந்த தேர்தலில் பெரும்பாலான இடங்களில் மூன்றாவது இடத்தைப் பிடித்ததாலும்—

ஜனாதிபதித் தேர்தலின் போது, தனது பலத்தை நாம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ரூ. 8 ஆயிரம் கோடி நிதிப்பற்றாக்குறை

கொழும்பு, ஓக. 29

திறைசேரியில் காணப்படும் நிதிப்பற்றாக்குறை 8 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டிவிடும் என்று தகவலறிந்த பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இலங்கைக்கு உதவும் நாடுகளுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறி, ஐ.தே.க. அரசு செலவு செய்ததால் இவ்வளவு பெருந்தொகை பற்றாக்குறை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இந்த ஆண்டின் பற்றாக்குறையை—

மொத்த உள்ளூர் உற்பத்தி வருமானத்தில் 6.5 சதவீதத்துக்கு அதிகமாகச் செலவாமல் கட்டுப்படுத்துவதாக ஐ.தே.க. அரசு உதவும் நாடுகளுக்கு உறுதியளித்து இருந்தது.

இந்த உறுதிமொழியை மீறி, தேர்தல் காலத்தில் அரசாங்கம் தாராளமாக பணத்தை அள்ளி வீசி செலவழித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## ஜனாதிபதித் தேர்தலின் பின் மீண்டும் பொதுத் தேர்தல்?

### புதிய அரசின் திட்டம்

கொழும்பு, ஓக. 29

ஜனாதிபதி தேர்தல் இன்னும் அறுபது நாட்களில் நடைபெறும்: அதைத் தொடர்ந்து இன்னொரு பொதுத்தேர்தல் நடைபெறலாம்.

— இப்படிக் கூறியுள்ளார் துறைமுகங்கள், கப்பல்துறை புனர்வாழ்வு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்.

கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்

ஜனாதிபதி தேர்தலின் பின் நியாய உரிய முறையில் பயன்படுத்தி மற்றொரு பொதுத் தேர்தலை நடத்தினால் அதிகப் பெரும்பான்மையுடன் பலமான ஆட்சியை அமைக்கலாம் என அரச வட்டாரங்கள் நம்புவதாகவும் —

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக மக்களைக் கவரும் விதத்தில் நலன்புரி திட்டங்களை அமுல்நடத்துவதில் அமைச்சர்கள் தீவிரமாக உள்ளனர் மேலும் என்றும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி நாகேஸ்வரம்

## ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான ரதோற்சவ

# ஸ்ரீரங்கநாதர் மண்டலாபிஷேக சிறப்பிதழ்

29 - 08 - 1994

# கண்ணனைக் காணக் கடமைகளைச் செய்யுங்கள்

நீதியான உணர்ந்துவன சமயங்கள்; தர்மங்களை ஆதாரமாகக் கொண்டு நிமிர்ந்து நிற்பது நீதியாகும். "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்கிறது புராணம்.

ஆகவே நாம் செய்யவேண்டிய நீதியான - தர்மமான கடமைகளைப் பெரும் பணியாகக் கொண்டால் இறைவன் எமது அருகே வந்து நிற்பார்.

புண்டலீகன் என்பவன் சிறந்த பண்பான மைந்தன். அவனது தாய் தந்தையாருக்கு இரு கண்களும் பார்வை அற்றவை. எனவே தினமும் புண்டலீகன் தமது பெற்றோரைத் தெய்வங்களாகப் பேணி— நீராட்டி மகிழ்ட்டு "கோவிந்தா கண்ணா" என்று நாராயண மந்திரம் சொல்லி பூசை செய்வான். அமுதூட்டுவான். தனது நாளாந்தக் கடமைகளை அதன் பின்பே செய்துகொள்வான்.

அவனிடம் வறுமையிலே

அருட்கவி
சீ. விநாசித்தம்பி

காணலாம். வாழ்வது வளம் இல்லாத பூமி. சிறு குடிசை. இப்படியாக அவனது வாழ்வுக் கடமைகள் நிகழ்ந்து கொண்டு போயின.

துவாரகையில் இருந்து பரமாத்மாவாகிய கண்ணன் ருக்மணி அம்மையாருடன் எழுந்தருளி புண்டலீகனின் குடிசைக்கு சாதாரண மனித வடிவத்தில் வந்தார். புண்டலீகனின் பெற்றாருடைய பூசை முடித்து திரும்பினான்.

அங்கே அழகான தம்பதிகள் நிற்பதைக் கண்டான். விரைந்து சென்றான். "பெரியீர் தங்களை உபசரிக்க முடியாதவனாக இருக்கிறேன். உங்களை அமரச் செய்வதற்கும் ஒரு ஆசனம் கூட இல்லையே" என்று தவித்தான்.

"கவலைப்படாதே உன்னைப் பார்ப்பதற்காகவே வந்தோம். இந்தச் செங்கட்டியே எமக்கு ஆசனமாகும். நீ பெற்றோருக்கு செய்யும் பணிவிடைகளே எமக்குகந்த உபசாரமாகும்" என்று கூறி எம்பெருமான் தம் சொந்த உருவைக்காட்டினார்.

புண்டலீகன் தன்னை மறந்தான். "கண்ணா கோவிந்தா கிருஷ்ணா" என்று கூத்தாடினான். பெற்றோரைத் தூக்கி வந்து ஆண்டவன் அடியிலே அமர்த்தினான். மூவரும் பரமாத்மாவைப் பணிந்தனர். உடனே புண்டலீகன் பெற்றோர் கண்ணொளி பெற்றனர்.

"மகனே நீ பெற்றோருக்குச் செய்யும் சேவையை மிகவாக மெச்சுகிறேன். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதை உகைறிவச் செய்தாய். உனக்கு யாது வரம்வேண்டும்" என்று வினவினார் பெருமான்.

"கண்ணா தேவரீரை வேங்கடத்திலோ, துவாரகையிலோ வந்து சந்தித்துச் சிந்திக்க வசதி அற்றவர்களாக இருக்கிறோம். தேவரீர் எமக்கு மாத்திரமன்றி மக்கள் அனைவருக்கும் அருள்பாலிக்கும் வண்ணம் இவ்விடத்தி

(5 ஆம் பக்கம் பார்க்க)

மலராக்கம்:
த. பரமலிங்கம்

## பிரதம குருவின் ஆசியுரை

இத்தலம் இருநூறு வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்தது. அக்காலம் கேணியடி நாகதம்பிரான் என மக்கள் வழிபட்டனர்.

3 – 9 – 1979 இல் ஸ்ரீநாகவரத நாராயண மூர்த்திக்கு முதலாவது கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. தேர்த்திருவிழா 29 – 8 – 1986 இல் ஆரம்பமானது.

இவ்வாண்டும் (29 - 8 - 94 திங்கட்கிழமை) எம்பெருமான் பாரதம் வென்ற வெற்றித் தேரிலே பவனி வருகின்ற காட்சியானது இந்நாளில் அடியார்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்களைய எழுந்தருளியது போன்றதே!

மெய்யடியார்கள் அனைவரும் திரண்டு வந்து பவனி கண்டு இஷ்டசித்தி பெற்றேகும் வண்ணம் ஆசி கூறுகிறேன்.

சிவஸ்ரீ கி. உருத்திரபுரேஸ்வர
சிவாச்சாரியர் (D R)

## பாற்கடல் விளைந்த முத்து!

உள்ளத்தில் உணர்ச்சி கூடி ஓங்கிய ஜோதி என்னும்
வெள்ளத்தில் வெக்கமுறி விரைந்திடு தேவரோடும்
பள்ளத்தில் நின்று பார்த்தால் பாற்கடல் விளைந்த முத்தாய்
தென்னுநிற் றெளிவாளம்மா சிறீரங்க நாதனாரே!

- தெய்வீகக்கவி.


ஸ்ரீரங்கநாதர் மண்டலாபிஷேகம்
சிறப்புற வேண்டுகின்றோம்

**ஏ. தியாகராசா**
காரைக்காட்டு வீதி,
வண் - வடமேற்கு, யாழ்ப்பாணம்.

**ராஜு ஸ்ரோர்ஸ்**
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம்**
148, கண்டி வீதி,
சாவகச்சேரி.

**கயல்விழி நகைப் பூங்கா**
தங்கப் பவுண் நகை வியாபாரம்
224-B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

**மங்கை பட்டுச்சோலை**
8, மத்திய சந்தை,
சுன்னாகம்.

**ராஜா மருந்துக் கடை**
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.



நாராயணர் தேரூர்ந்து
நாடு சிறப்பதாக!

**சிற்றி காமன்ஸ் புடவை மாளிகை**
பலாலி வீதி, திருநெல்வேலி.
தொழிலகம்:
'சிவபதி' இணுவில்.

**லிங்கம் கூல்பார்**
(வெலிங்டன் சந்தி)
53, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**எஸ். ரம். பெர்னான்டோ**
மூக்குக் கண்ணாடி முகவர்
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி மருங்கில்)
யாழ்ப்பாணம்.

**ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம்**
58, குறுக்கு வீதி, நல்லூர்.
**ஆர். வி. ஜி. மருந்தகம்**
504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**லீலா வெதுப்பகம் விற்பனை நிலையம்**
சந்தை சதுக்கம், சங்கானை.
கிளை: சிரணி, சண்டிலிப்பாய்.

**கி. சிலுவைதாஸன் ஜே. பி.**
13, மத்திய கிழக்கு வீதி,
நெக்கிலமேசன், யாழ்ப்பாணம்.

**அசோகா நகை மாடம்**
275, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**க. கு. கந்தையாபிள்ளை**
சக புத்திரர்
124, 318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(விளம்பர இல. சி/8957)



**இரசாயனவியல்**

**SCIENCE ACADEMY இல்**
காலை 8-00 மணிக்கு நிகழும் A/L 96 பிரிவுக்கான வகுப்பு -

**SCIENCE COLLEGE இல்**
காலை 9-00 மணிக்கு நிகழும் A/L 95 பிரிவுக்கான வகுப்பு - ஆகியவை நாளை செவ்வாய்க்கிழமையும் (30 -08 - 1994) இடம்பெறும்.

(32620) ஆ. மகாதேவன்



கால்நடை வளர்ப்போரே!
உங்கள் முயற்சிக்கு உன்னத பரிசுகள்!

**கால்நடை வளர்ப்போருக்கான**
**போட்டிகள்**

நல்லூர் கந்தசுவாமி கோவில் [illegible] முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடத்தப்படும் கால்நடை வளர்ப்போருக்கான போட்டியில் கலந்துகொண்டு பெறுமதிமிக்க பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்

உங்களிடமுள்ள சிறந்த கால்நடைகள் பற்றிய விபரங்களை எதிர்வரும் 01-09-1994 ஆம் திகதிக்கு முன்னதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட/கோட்ட செயலக மூலம் எமக்கு அறிவியுங்கள்.

அக்கால்நடைகள் விசேட குழுவால் தங்கள் வீட்டிற்கோ பண்ணைக்கோ வந்து பார்வையிட்டு மதிப்பீடு செய்யப்படும். அவற்றில் தெரிவு செய்யப்படும் கால்நடைகள் காட்சிவைத்திடத்திற்கு கொண்டுவரப்பட்டு அங்கு இறுதித்தேர்வு நடைபெறும்.

மேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு முகமைச் செயலக/மாவட்ட/கோட்ட/வட்ட கிராமிய செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தமிழீழ**
**பொருண்மிய மேம்பாட்டு**
**நிறுவனம்**
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

[சி/8959]


பிணையில் விடப்பட்டுள்ள

## முன்னாள் அமைச்சரை நீதிமன்றில் ஆஜராக பணிப்பு

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.பியுமான ஏ. எம். எஸ். அதிகாரியை அடுத்த மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அனுராதபுரம் நீதிவான் சிறிசேனா நந்த ஹேரத் உத்தரவிட்டுள்ளார்.

இக்கொலை தொடர்பாக ஆறு சந்தேக நபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த தவணையின்போது ஏ.எம்.எஸ் அதிகாரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அதனைத் தொடர்ந்தே நீதிவான் முன்கண்ட உத்தரவை பிறப்பித்தார். (உ-எ)

தேர்தல் காலத்தில்

## கடமை தவறிய பொலீஸாரை விசாரிக்க உயர்நிலைக் குழு

### முன்னாள் அரசினால் நியமனம்

கொழும்பு, ஓக. 29

தேர்தல் காலத்தில் சட்டத்துக்கு முரண்பட்ட விதத்தில் கடமையில் ஈடுபட்ட பொலீஸாரை விசாரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார் என்று அமைச்சர் அனுருத்த தெரிவித்தார்.

இக்குழு ஒரு மாத காலத்தினுள் தமது விசாரணையை முடிக்கும்.

இக்குழு சம்பந்தப்பட்ட பொலீஸ் நிலையங்களுக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தி குற்றவாளிகளாகக் காணப்படும் பொலீஸார் பற்றிய அறிக்கையை பொலீஸ்மா அதிபருக்கு சமர்ப்பிக்கும் என்றும் அவர் கூறினார். (எ)

வாக்காளர் பட்டியலில் இருந்து

## 3 லடசம் பேர் நீக்கப்பட்டது பற்றிய விசாரணை விரைவில்

### அமைச்சர் தொடங்கொட அறிவிப்பு

கொழும்பு, ஓக. 29

கடந்த தேர்தலுக்கு முன்பதாக வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் மூன்று லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்ட விஷயம் நீதி, வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் விரைவில் [illegible] பிக்கப்படும் என்று உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்திருக்கிறார்.

தமக்குத் தெரிந்த மாகாண சபை உறுப்பினர்கள் சிலரின் பெயர்களும் வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்கப் [illegible]

## லலித் கொலை: விசாரிக்க ஆணைக்குழு

கொழும்பு, ஓக. 29

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொலைபற்றி விசாரிக்க ஆணைக்குழு விரைவில் நியமிக்கப்படும்.

அமைச்சரும் லலித்தின் மனைவியுமான ஸ்ரீமணியுடன் கலந்தாலோசனை நடத்தப்பட்ட பின்னரே ஆணைக்குழு நியமனம் பற்றிய அறிவிப்பு வெளியாகும் என்று அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார். (உ-எ)

## வங்கிகளின் தலைவர்கள் ராஜினாமா!

கொழும்பு, ஓக. 29

நாட்டில் உள்ள நான்கு அரச வங்கிகளின் தலைவர்கள் உட்பட அவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச அடமான முதலீட்டு வங்கி, மற்றும் தேசிய லொத்தர் சபை, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், இலங்கை தேசிய காப்புறுதி நிறுவனம் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளே பதவி விலகியுள்ளன. (ஐ-6)

## யானையை கண்டு கீழே விழுந்தவர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 29

பரம்மீது கட்டப்பட்டிருந்த பரண் மீது நெற்பயிருக்கு காவலுக்கு இருந்தவர் யானை ஒன்றைக்கண்டு கீழே விழுந்ததினால் காயம் அடைந்தார்.

மாங்குளம், பனிக்கம்குளத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உடையார் கட்டைச் சேர்ந்த செ. பஸ்தியாம்பிள்ளை கணேஷ் (வயது 20) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். (இ-15)


**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம்

**பொதுச்சபைக் கூட்டம்**

இடம்: புதிய விஞ்ஞான கல்வி நிலையம்
(எழிலகம் முன்பாக)

காலம்: 31-08-94 புதன் காலை 9-00 மணி

இக்கூட்டத்திற்கு பிரதிநிதிகளை அனுப்புவதை தவிர்த்து அனைத்து உறுப்பினர்களும் தாமே தவறாது கலந்து கொள்ளவும்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

94-08-28.

(சி-8958)


வீட்டுக்கிருத்திய அழைப்பும்
**நன்றி நவிலலும்**



தாயின் மடியில் 15 — 06 — 1920

ஆண்டவன் அடியில் 14 — 08 — 1994

அமரர்
**குற்றாலிங்கம் மாணிக்கம்பிள்ளை**
(நாதஸ்வர வித்துவான்)

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த யாவருக்கும் இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 29 - 08 - 1994 திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
திருமதி. ச. மாணிக்கம்பிள்ளை
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

1010/8, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(32619)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராமஜெயம்
ஸ்ரீ வரதராஜாய நம

# பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேர்த்திருவிழா

## சிறப்புமலர் (29 - 08 - 1994)

# குளக்கோட்டு மகராசன் திருப்பணிசெய்த

# திவ்ய பொன்னாலைத் திருப்பதி

பொன்னாலை யென்னும் கேழ்மிக்க க்ஷேத்திரத்தில்
எந்நாளும் வீற்றிருந்து எமையாளும் மன்னாவேள்
பந்நாளாய் நாம் செய்த பாவங்களைத் தொலைத்து
இந்நாளில் காப்பாய் இனிது.

தட்சிண கைலாச மகா க்ஷேத்திரங்கள் இருக்கப் பெற்றதும் சுவர்க்கத்திலும் பார்க்க அழகுள்ளதுமாகிய இலங்கையின் வடபாகத்தில் விணாகானபுரமென்று சொல்லுகின்ற யாழ்ப்பாணத்தில் மேற்குத் திக்கில் நீர் நிறைந்த குளங்களும், வயல்களும் முன்னே இருக்கவும், உவர் நீர்க்கடலும், சமுத்திரமும் தெற்கு மேற்குத் திசைகளில் பொருந்தவும் பெற்றதாய் இவற்றிற்கு நடுவண் சதுரங்க மெனும் மணற்பூமியில் பொன்னாலயம் என்னும் திவ்ய ஸ்தலம் இருக்கிறது. ஆலயத்திற்கு முன்னே குறுக்காகச் செல்லும் தெருக்கரை மார்க்கமாகப் பருத்தித்துறைக்குப் போகலாம். ஆலயத்துக்கு முன் (கிழக்கு மேற்காக) செல்லும் தெரு மூளாய் மார்க்கமாக யாழ்ப்பாணம் செல்லும் பிரசித்தமான தெருவைச் சந்திக்கின்றது.

இத்தலத்திற்கு சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

சுவர்ணாலயபுரி

இந்திரன் வசிக்கப் பெற்றதனாலும் இந்திர விமானம் ஆதிகூர்மத்தோடு தோன்றிய படியாலும் இப்பெயர் பெற்றது.

சதுரங்கம்

ஆலய உற்பத்திக் காலத்தில் கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெருமணலில் ஆமையானது விடப்பட்டுக் கல்லானவுடன் அவ்விடத்திலேயே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் இப்பெயர் உண்டாயிற்று. அரங்கம் என்பது விட்டுணுவுக்குப் பிரியமாக அமைந்த தலப்பெயர். பாரத நாட்டிலும் ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் எனப்பல அரங்கங்கள் உள.

பொன்னாலயம்

முன்னொரு காலத்தில் விட்டுணு மூர்த்தியை மகாலக்குமி பூசித்த ஸ்தலம். பொன்



னென்னும் பல பொருளொரு சொல் ஈண்டு இலக்குமியைக் குறித்து நின்றது. அன்றி பொன்னம்பலம் பொன்னரங்கம் என்பன போல இதுவும் ஒரு காலத்துப் பொன்னால் அமைந்த ஆலயமாய் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

இவ்வாலயம் பொன்னாலை என்னும் கிராமத்தின் மேற்கே கிராமத்தைப் பார்ப்பது போல கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் மிக அழகாக விளங்குகிறது. இதற்கு இப்போது இரு பிராகாரங்களே உள. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஏழு பிராகாரங்கள் இருந்தன. அவற்றில் ஏழாவது பிராகாரத்தின் முன்னுள்ள கணேசர் ஆலயம் இப்போதும் உள்ளது. இப்போது தேரோடும் வீதியில் அதாவது கோயிலுக்குப் போகிற முன்னமைப்பின் இவ்வாலயத்தோடு புராதன மாயமைந்தவரும், வரந்தருபவருமான நரசிங்க வைரவர் வீற்றிருந்தருளியுள்ளார். உட்பிராகாரத்தில் நாகதம்பிரான், மகாலக்குமி, ஸ்ரீராமர், பூமிலக்குமி, சனீஸ்வரன், தீர்த்தக்கிணறும், வன்னி மரமும், அனந்தசயனம், நவக்கிரகம், வசந்த மண்டபம், யாக மண்டபமும், ஆஞ்சநேயர் கோயிலும் இருக்கின்றன. செய்தற்கரிய பெரிய திருப்பணி, குளக்கோட்டு மகாராசனாற் செய்யப்பட்டது. அவனால் அக்காலத்தில் அமைக்கப்பட்ட ஏழு வீதிகளும் பின்னே ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களாகக் கட்டப்பட்டன. இப்போது சிறிய முறையில் கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது. முன்னே புலவர்களாலும், பக்தர்களாலும் பாடப்பெற்ற பதிகங்கள் அநேகம் இல்லாமற் போயின. சிலவே உள. பறாளை விநாயகர் பள்ளு என்ற நூலில் இத்தலப் பெருமை சிறிது கூறப்படுகின்றது. அதில் சிறு பகுதி.

தண்ட நேமிதனு -
வொடுவாள் சங்கம்
தாங்கி வேலை அறிதுயில் -
செய்யும்
கொண்டல் வண்ணன் -
பொன்னாலைப் பதியுறை
கோல நீல நெடுமால் மருகன்.

இவ்வாலயத்தில் அநேக திருப்பணிகள் முற்றுப் பெறவில்லை. சுற்றாக்கொட்டகை, ராச கோபுரம், மணி மண்டபம், மதில்கள் என்பன அவை. தனவான்களும், அன்பர்களும் இத்திருப்பணிகளைச் செய்ய முன்வருவார்களாக. ★



# 15 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே புகழ்பூத்த பொன்னாலை ஆலயம்

**- வி. சிவசாமி எம். ஏ -**
(யாழ். பல்கலைக் கழகம்)

ஈழத்திருநாட்டிலுள்ள இந்து சமயத் திருத்தலங்களில் ஒன்றாகப் பொன்னாலை திகழ்கின்றது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் எவ்வாறு பழம்பெருமையும், புகழும் வாய்ந்த சைவத் திருத்தலங்களாக விளங்குகின்றனவோ, பொன்னாலை, கவிபுரம், தேவிநுவர முதலியன வைஷ்ணவத் திருத்தலங்களாக விளங்குகின்றன. திருமால் இந்துசமயத்திலே மும்மூர்த்திகளிலொருவராகவும், காத்தற் கடவுளாகவும் திகழ்பவர்; எம் நாட்டின் காத்தற் கடவுளாகவும், வடகோடியிலும், தென்கோடியிலும் கோயில் கொண்டிருப்பது கவனத்திற்குரியது.

பொன்னாலையின் வரலாற்றினைத் துரதிர்ஷ்டவசமாக நன்கு ஒழுங்காக எழுதுதற்கான வரலாற்று மூலங்கள் கிடைக்கவில்லை. எனினும், வடமொழியிலுள்ள காந்த புராணத்தின் ஒரு பகுதியான தக்ஷிண கைலாஸமஹாத்மியம் 22ஆம் அத்தியாயம், சிங்கள மொழியிலெழுதப்பட்ட கோகில சந்தேசம் முதலான மரபுவினைத் தழுவிச் சின்னத் தம்பிப் புலவர் எழுதிய பறாளை விநாயகர் பள்ளு முதலிய நூல்கள், இப்போதைய கிருஷ்ணன் கோயிலிலுள்ள கல்லாலான கூர்மம் (ஆமை) மஹாலக்ஷ்மி சிலை, இத்தலம் பற்றிய ஐதீகங்கள் முதலியவற்றின் துணை கொண்டு சில குறிப்புகளை எழுதலாம்.

வரலாறு

இன்று கிடைத்துள்ள சான்றுகளின்படி இத்தலம் கி. பி. 15ஆம் நூற்றாண்டிற்கு முன்பே புகழ் பெற்றிருந்தது என்று கொள்ள இடமுண்டு. இத்தலத்தின் அயலிலே, புராதன இலங்கையின் புகழ் பெற்ற சர்வதேசத் துறைமுகங்களில் ஒன்றான ஜம்புகோளம் (சம்புத்துறை) விளங்கிற்று. இலங்கைக்குப் பௌத்தத்தினைக் கொண்டு வந்த மகிந்ததேரரின் சகோதரி சங்கமித்தா இந்தியாவிலிருந்து வந்து தங்கி அனுராதபுரம் சென்றாள் என பௌத்தமரபு கூறும். மேலுமிங்கு சம்பேஸ்வரம் எனும் சிவன் கோயிலிருந்ததாகவும் ஐதீகம் உண்டு.

பொன்னாலை சுவர்ணாலயபுரி, சதுரங்கம் எனவும் அழைக்கப்படும். இந்திரன் வாழ்ந்தமையாலும், இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றியதாலும், சுவர்ணாலயபுரி என்றபெயர் ஏற்பட்டதென்பர். சுவர்ணாலயத்தின் தமிழாக்கமே பொன்னாலயம். முன்னொரு காலத்தில் இங்கு மஹாலக்ஷ்மி திருமாலை பூசித்தாரம். பொன் செல்வத்திற்கு இறைவியான லக்ஷ்மியையும் குறிக்கும். மேலும் பொன்னம்பலம், பொன்னரங்கம் போல இதுவும் பொன்னாலே வேயப்பட்டிருந்ததோ தெரியவில்லை, ஆலயம் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலே கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெருமணலிலே ஆமையானது விடப்பட்டுக் கல்லானவுடன் அவ்விடத்திலே புராதன ஆலயம் அமைக்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது.

ஐதீகம்

தக்ஷிண கைலாய மஹாத்மியத்திலேயுள்ள பொன்னாலைப் பெருமையுரைத்த படலத்திலே (திருமால்) கல்லாலான ஆமை தற்போதைய ஆலயத்திற்கு மேற்கேயுள்ள கடற்கரையிலே வலைஞரால் கொண்டு வரப்பட்டமையும், அப்போது ஏற்பட்ட தெய்வீக அற்புதங்களும், தொடர்ந்து அமைக்கப்பட்ட புராதன ஆலயமும், அங்கு வழிபட்ட இந்திரன் சாபம் நீங்கியதும் திருமாலின் திருவடிச் சுவடு திருவடி நிலையில் உள்ளதும், பிறவும் பற்றித் தலபுராண இயல்புகளுக்கேற்ப எடுத்து வரைக்கப்படுகின்றன.

இந்தியாவிலிருந்து இலங்கை, மலேசியா, இந்தோனிசியா, இந்தோசீனா முதலிய நாடுகளுக்கு இந்திய பண்பாட்டுடன் சைவம், வைஷ்ணவம், பௌத்தம் முதலிய சமயங்களும், இவை சார்பான நிறுவனங்கள் பற்றிய கருத்துகளும் பரவியது வரலாற்றுண்மையே. சைவம் போலவே வைஷ்ணவமும் ஈழத்தில் பரவியிருக்கலாம். அதுவும் பழைய துறைமுகம் ஒன்றின் அயலிலே வைஷ்ணவ ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தமையிலே வியப்பில்லை. புராதன ஈழத்தின் பிற இந்து ஆலயங்கள் [illegible] எடுத்துக் காட்டாகதி திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் முதலியன குறிப்பிடற்பாலன.

கோகில சந்தேசத்தில் வருணனை

கி. பி. 15 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியிலே சிங்கள மொழியில் எழுதப்பட்ட கோகிலசந்தேசம் எனும் நூலிலே பொன்னாலையில் எழுந்தருளியிருக்கும் திருமாலைப் பற்றிய வருணனை ஒரு செய்யுளிலே வருகின்றமை குறிப்பிடற்பாலது.

மேலும் இங்கு நிலவி வரும் மரபுகளின்படி, பழைய ஆலயம் ஏழு பிராகாரங்கள் கொண்டிருந்தது எனவும், ஆக வெளியேயுள்ள ஏழாவது பிராகாரமிருந்த இடத்திலே தான் தற்போதைய ஆலய முற்புறத்தில் உள்ள விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது எனவும் அறியப்படுகிறது. பழைய ஆலயத்தைக் குளக்கோட்டன் அமைத்தான் எனவும் ஒரு சாரார் கருதுவர்.

திருகோணமலையிலிருந்த புராதன சைவ ஆலயத்துடனும் இவன் தொடர்பு படுத்தப்படுகிறான். தமிழகத்திலுள்ள பெரிய வைஷ்ணவர் கோயிலான ஸ்ரீரங்கத்திற் போன்று பொன்னாலையிலும் ஏழு பிராகாரங்கள் இருந்திருக்கலாம். ஆனால் தக்க வரலாற்று ஆதாரங்களால் இது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இன்றைய ஆலயத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் முன்னைய கட்டிடப் பகுதிகள் சில காணப்படுதலை அவதானிக்கலாம். எவ்வாறாயினும் சிறப்புடன் இலங்கிய இவ்வாலயம் கி. பி 16 ஆம் நூற்றாண்டிலே போர்த்துக்கேயரின் மதவெறிக்கும் கலை அழிவுக் கொள்கைக்கும் இலக்காகியது. இக்கோயிலை இடித்து இங்கிருந்த கற்களைக் கொண்டு சங்கானை போன்ற சில இடங்களிலே கிறிஸ்தவ ஆலயங்களை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தீயினில் தூசாகும்!

மாயனை மன்னு வட மதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக்குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர்த் தூவித் தொழுது
வாயினாற்பாடி மனத்தினால் சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்

— திருப்பாவை.

## பொன்னாலை எனும் பதி

சந்தண மரங்களில், சர்திபல ஒதிய
தருக்கள் நிறைய
கந்தர நெடுங்கடல் வளைந்திட முகுந்தனுறை
தொல்பதியதாம்
பந்தணி முலைச்சியர்கள் பாடி நடமாட
இமையோர்கள் பரவ
இந்திரன் வணங்கிட இருப்பது பொன்னாலயம்
எனும் பதியதே

## தித்தித்திருக்கும்

கருப்பூரம் நாறுமோ
கமலப் பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன் தன்
வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே

— நாச்சியார்

## அச்சுவை பெறினும் வேண்டேன்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே

— திருப்பாணாழ்வார்.

## நலம் தரும் சொல்

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர்
ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு
பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும்
ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

— திருமங்கைஆழ்வார்

## யாம் பெறும் சம்மானம்

கூடாரை வெல்லும்சீர் கோவிந்தா உன்றனைப்
பாடிப்பறைகொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

ஆவிதரு மருமருந்தே யமரரேறே
யலைகடற் பாற் றுயில் துறந்தவாழியானே
பாவியடியேன் வருத்தம் பொறுக்கலாற்றேன்
பார்த்திருத்தல் நீதியோ பதிபொன்னாலை
மேவியவெம் பெருமானே மேவியெங்கும்
வேர்த்திருகண்ணீர் சொரிய விருப்பத்தோடு
கோவிந்தா வென்றழுது கொண்டே - புன்றன்
செய்மலர்ச் சேவடியிணையே குறிக்கின்றேனே.

ஸ்ரீ வரதராஜப் பெருமானின் நல்லருள் அனைவருக்கும்
கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

5ஆம் திருவிழா உபயம்
திரு. பி. பத்மநாதன் குடும்பம்
கொட்டடி, யாழ்ப்பாணம்.

6ஆம் திருவிழா உபயம்
திரு. கந்தையா குடும்பம்
பொற்பதி றோட், கொக்குவில்.

திரு. க. செல்வராசா
காரைநகர்.

திரு. சு. சற்குணலிங்கம்
(குமார்) லக்கி ஸ்ரோஸ்
கீரிமலை.

12ஆம் திருவிழா
உபயகாரர்கள்
பொன்னாலை.

13ஆம் திருவிழா
உபயகாரர்கள்
பொன்னாலை.

கண்ணன் மடாலயம்
பொன்னாலை

கண்ணா கிளினிக்
சித்தன்கேணி.

வழக்கம்பரை அம்மன் கோயில்
குருக்களும், பொன்னாலை
ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில்
விசேட சாத்துப்படி
திரு. சுந்தரம் ஐயா அவர்கள்

தவில் மேதை
என். கே. வீராச்சாமி
காரைநகர்

ஸ்ரீவரதராஜப் பெருமாள்
தண்ணீர்ப் பந்தல் சபையினர்
பொன்னாலை.

கண்ணன் கடாட்சம்
பெற்றுய்வோமாக!
யாழ்: நகரில் தலைசிறந்த விளையாட்டு
கழகமாக 4ஆவது அகவையில்
நடைபோடுகிறது
ஜுப்பிற்றர் விளையாட்டுகழகம்
பிரதான வீதி, சங்கானை.

றெமிங்ரன் கல்வி நிலையம்
மூளாய்.

இப் போர்க்கால சூழ்நிலையிலும் தவறாது ஆட்சியே நடைபெறுகிறது என்பதைப் பக்தர்களுக்கு உணர்த்துவதற்கு திருமகள் - பூமகள் சமேத—
ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேரேறி வரும் காட்சியைக் கண்டுகளித்து தம் களது துன்ப துயரங்களைப் போக்கித் தொன்மை உடலதைபோல் வந்து கூடுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஞாபகமிருக்கட்டும்

இலங்கயன் பதிப்பகம்
ஸ்ரீலங்கா அச்சகம், ஸ்ரீ காந்தா அச்சகங்களின்
ஒன்றிணைப்பே
இலங்கயன் பதிப்பகம்

(விளம்பர இல: 32597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இல. 87, நாவலர் வீதியில் அமைந்திருக்கும் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பு சொக்கலிங்கம் 10, சங்க வீதி, (பிள்ளையார் கோயில் ஒழுங்கை), வண்ணை மேற்கு, சுன்னாகம். (32598)

தமிழ் புதிய 8 போம் (ரெமிங்டன்) தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (32599)

### உடன் விற்பனை

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 702, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (32612)

### உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சைவ நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்ற முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். [இ-8678]

### தேவை

Typist Cum Clerk தமிழ் Typing இல் நல்ல தேர்ச்சியுள்ள A/L படித்த பெண்கள் மட்டும் 1-9-94 மு. ப. 10-00 — பி. ப. 4-00 வரை சான்றிதழ்களுடன் நேரில் வரவும். Bond கல்வி நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7727)

### தட்டெழுத்து வகுப்பு

தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்பு (ஆங்கிலம்-தமிழ்) மீண்டும் 1-9-94இல் ஆரம்பமாகின்றன. இடம்: சிறி வீதி, (தாவடி ஒழுங்கை), திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. [32564]

### மணிக்கூடுகள் தேவை

உதிரிப்பாகங்களுக்காக பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-8686)

### காவேரி சீயாக்காய்

ஆரவிதமான இயற்கைப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவது காவேரி சீயாக்காய்ப் பவுடர். இப்போது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்கவும். (31231)

### புத்தகங்கள்

மாணவர்கள் பேச்சுப் போட்டிகளில் முன்னேற உதவும் நூல் "என்னாலும் பேச முடியும்" குழந்தைகளுக்கான பாடல்கள் "ரோஜாப் பூ" "பூந்தோட்டம்" அறிவு விருத்திக்கு "நொடியும் விடையும்" நல்லூர் உற்சவ காலத்தில் ஸ்ரீகாந்த, பூபாலசிங்கம், பாலாஜி புத்தகசாலைகளில் பெறலாம். நூலாசிரியர்: ஜேசப்பாய் சிவம். (32605)

### வெளிவந்துவிட்டது

தரித மீட்டலுக்கான சைவ நெறியினா-விடை ஆண்டு 11 ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு:- சோதி பொத்தகசாலை, கச்சாய் வீதி, சாவகச்சேரி. ஏகவிநியோகத்தர்கள்: ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-8930)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக 29

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் கடந்த சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடத்தப்படவிருந்த பொது அறிவு, பேச்சு, விநோத வாய்ச்சீட்டு ஆகியவற்றிற்கான பரிசளிப்பு விழா —

தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (ஓ)

உ

இருபாலை கிழக்கு - கேணிக்குளம்பதி

## இலிங்கப்பிள்ளையார் தேவஸ்தானம்

(பழம்பிள்ளையார்)

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1994

விநாயகர் அடியார்களே!

01 - 09 - 1994 வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 09 - 09 - 1994 தேர் உற்சவமும், 10 - 09 - 1994 தீர்த்த உற்சவமும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அடியவர்கள் எம்பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி;

மாலை 8 மணி முதல் 9 மணி வரை
தெய்வீக பேருரை
நிகழ்த்துபவர்: ஆறு. திருமுருகன்
(கம்பன்கழக உறுப்பினர், ஆசிரியர்)

இங்ஙனம்:
ச. வைத்தியநாதன் ஐயா,
ஆலய பரிபாலகரும், அர்ச்சகரும்.

தர்மகர்த்தாக்கள். [32608]

உரும்பிராய் ஓடையம்பதி

## அருள்மிகு கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த இலட்சார்ச்சனை

## தெய்வீக இலக்கியப் பேருரை

**30 - 08 - 1994** தொடக்கம்
**09 - 09 - 1994** வரை

தினசரி பி. ப. 4 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

தெய்வீக இலக்கிய பேருரை:

நிகழ்த்துபவர்:
மதுரகதாஸாகரம் த. சிவகுமாரன் அவர்கள்
யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர், அமைப்பாளர் காரைநகர் கம்பன்கழகம்)

காலம்:- மாலை 6-30 — 7-30 வரை

கருத்து:-
நெஞ்சமே அஞ்சாதே நீ, கற்றது கைமண்ணளவு, பட்டுக்கிழியும் பாட்டுக்கிழியாது, கோதைத் தமிழ், அருமந்த அரசாட்சி, கல்லெல்லாம் மாணிக்க கல்லாமோ, தனி மாமகன், ஆவணி அப்பன்.

அடியார்கள் அனைவரையும் குறித்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றி கற்பகவிநாயகரின் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

— பரிபாலன சபையினரும்,
உபயகாரரும்.

[32611]

## குமுதினி தையல்பயிற்சி நிலைய தையல் கண்காட்சி

நாளை (30 - 08 - 1994) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு குமுதினி தையல் பயிற்சி நிலையத்தின் தையல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்குதலும் பருத்தித்துறை புனித தோமையப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. இமானுவல் அடிகள் அவர்களின் தலைமையில் சாவற்கட்டு ஆனைக்கோட்டை மகாத்மா சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

— குமுதினி நிர்வாகத்தினர்.

(32610)

உ

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் ஆவணி மாதம் 5ஆம் நாள் (21 - 08 - 1994) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எனது கணவர்

### சிவஸ்ரீ சோ. வெங்கடேஸ்வரக் குருக்கள்

அவர்களது

ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

| | |
|---|---|
| தசாகம்: | ஆவணி 14 ஆம் திகதி (30 - 08 - 1994) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி |
| ஏகோதிஷ்டம் மாசியம்: | ஆவணி 15 ஆம் திகதி (31 - 08 - 1994) புதன்கிழமை |
| சபிண்டீகரணம்: | ஆவணி 16 ஆம் திகதி (01 - 09 - 1994) வியாழக்கிழமை |
| கிருஹயக்ஞம்: | ஆவணி 18 ஆம் திகதி (03 - 09 - 1994) சனிக்கிழமை |

மேற்படி கிரியைகளிலும் (03 - 09 - 1994) சனிக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
திருமதி வெ. மீனாட்சியம்மா, பெறாமக்கள், மருமக்கள்.

கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்,
அளவெட்டி வடக்கு.
[32609]

# யாழ். தொண்டர் நிறுவனங்களிடம் நிவாரண பொருள் கையிருப்பில் இல்லை

## கொழும்பில் இருந்து எடுத்துவர கப்பல் வசதி இல்லாததால் இந்நிலை

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களிடம் பொது மக்களுக்கு வழங்கத் தேவையான நிவாரணப் பொருள்கள் எதுவும் தற்சமயம் கையிருப்பில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த தொண்டர் நிறுவனங்களால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை வடக்கே எடுத்துவர கப்பல் வசதி கிடைக்காததாலேயே இந்நிலை தோன்றியுள்ளதாக நிறுவனங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களை வடக்கே ஏற்றிவரும் கப்பல் சேவைகள் கடந்த சில வாரங்களாக தாமதமடைந்துள்ளன. இந் நிலையில் தாம் கொள்வனவு செய்த பொருள்களை இங்கு எடுத்து வர இன்னும் பல வாரங்கள் காத்திருக்கவேண்டி இருக்கும் என தொண்டர் நிறுவன பிரதிநிதிகள் சிலர் தெரிவித்தனர்.

தற்சமயம் தமது களஞ்சியங்கள் பொருள்கள் இன்றி வெறுமையாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-3)

## தவறிவிட்டது

722140680V இலக்க தேசிய அடையாள அட்டை. நூலக திறப்புக் கோர்வை மற்றும் முக்கிய ஆவணங்களுடன் சிறுதொகை பணமும் கொண்ட காசுப் பேர்ஸ் கொக்குவிலுக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கொக்குவில், தொழிநுட்பக் கல்லூரியில் அல்லது மு. பூலோகராசா, அமபனை மேற்கு, சுன்னாகம், என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (32613)

## யுத்த நிறுத்த அறிவிப்பை படையினர் ஏற்று நடப்பர்

### ஹமில்டன் வனசிங்க தகவல்

வடக்கு - கிழக்கில யுத்த நிறுத்தம் செய்வது தொடர்பாக அரசாங்கம் ஏதாவது முடிவுக்கு வந்தால் ஆயுதப் படையினர் அதற்கேற்ப நடந்து கொள்வார்கள்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இத்தகவலை வெளியிட்டார்.

யுத்த நிறுத்தம் ஒன்றை அமுல் நடத்துவது தொடர்பாக உத்தியோகபூர்வமாக தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் ஒன்றை அமுல் நடத்துவது பற்றி யாராவது உங்களுடன் பேச்சு நடத்தினார்களா என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசு எவ்வித முடிவையும் எடுக்காத காரணத்தினால் வடக்கு - கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினர் தமது அன்றாட கடமைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்றும் அவர் கூறினார். (ஒ-எ)

## பதில் சட்டமா அதிபராக ஷிப்லி அஸீஸ் நியமனம்

கொழும்பு, ஓக. 29

பதில் சட்டமா அதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி ஜனாப் முகமது ஷிப்லி அஸீஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் இவர் உதவி சட்டமா அதிபராக பணியாற்றி வந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றதை அடுத்து சட்டமா அதிபர் திலக் மாரப்பன ஓய்வு பெற்றதை அடுத்து, இந்த நியமனத்தை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நேற்றுச் செய்தார்.

1969 ஆம் ஆண்டில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முடிக்குரிய வழக்கறிஞராக முகமது ஷிப்லி அஸீஸ் சேர்ந்தார்.

திலக் மாரப்பன சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டதை அடுத்து இவர் உதவி சட்டமா அதிபராக பணியாற்றி வந்தார். (இ-எ)

## தொழில் பயிலுநர் கொடுப்பனவு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 29

தேசிய தொழில் பயிலுநர் கைத்தொழில் பயிலுநர் அதிகார சபையால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட இலவச பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய பயிலுநர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாத நிறுவனங்களின் உரிமையாளர்கள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூற வசதியாக கலந்துரையாடல் ஒன்றை சபையின் வடக்கு - கிழக்கு மாகாண பயிற்சி முகாமையாளர் திரு. ம. சிவயோகசுந்தரம் கூட்டவுள்ளார்.

மேற்படி கலந்துரையாடல் இன்று 29ஆம் திகதி முற்பகல் 9மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து மேலும் கூடிய பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த உரிமையாளர்கள் இக் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. [ஐ-17]

### கண்ணனைக்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேவே அமர்ந்தருள வேண்டும்" என்றான் புண்டலீகன்.

"மகனே நீ பெற்ற இன்பத்தை உலகெலாம் பெற விரும்பும் உனது பக்தியை மெச்சினேன். உலகத்திலுள்ளோருக்கருள் நீ திலகமாக விளங்குவாய். நீ கேட்டவரப்படி இங்கே சிலைவடிவில் நின்று அருள்பாலிப்போம்" எனக் கூறி திருக்கோயில் கொண்டார்.

இத்திருத்தலமே ஸ்ரீபண்டரிபுரம் என்னும் கண்ணனுடைய தேவஸ்தானமாகும். இத்தகைய கண்ணனாகிய ஸ்ரீநாகவரதநாராயணப் பெருமான் இன்று (29-8-94) அளவெட்டி நாகேஸ்வரத்தில் தங்கரதம் ஏறி அருட்காட்சி தருகின்றார். அடியார்கள் தரிசித்து நல்லருள் பெறுவார்களாக! ★

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 28 — 01 — 1914 | 01 — 08 — 1994 |

அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் வேலுப்பிள்ளை கந்தையா

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் நல்வழி காட்டிய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும், எங்கள் துயரங்களில் பங்குபற்றி பல வழிகளில் உதவி செய்த உற்றார், உறவினர், அயலவர் அனைவருக்கும் அன்னாரின் மகன், பேரப்பிள்ளைகள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

31 - 08 - 1994 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் வீட்டுக் கிருத்தியங்களிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மகன்: க. சிவநேசன்,
பேரப்பிள்ளைகள்: சி. சிவமலர்
சி. சிவகுமார்.

சிவா சைக்கிள் வேக்ஸ்,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (7616)

## ஈராண்டு நினைவஞ்சலி



| தாயுடன் பேசும் சித்திரமாக! | இறையுடன் வாழும் உத்தமனாக! |
|---|---|
| 16 — 06 — 1939 | 21 — 08 — 1992 |

அமரர்

### காசிப்பிள்ளை சோமசுந்தரம்

(இராசு — (சோமு)
(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன கனரக வாகன இயக்குநர் கற்பூழிப் பகுதி)

திதி. 29 — 08 — 1994

ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரோடி வாழையடி வாழையாக நாம் வாழ நினைத்த — வேளையிலே

பொன்னான உங்கள் மேனியிலே காலன் அறியாத நோயாகி ...... மனிந்தானோ கண்ணின் கருமணியாக காத்து வந்த செல்வங்களை விட்டு விட்டே கார் கால மேகமென — மறைந்தேனோ!

தங்கி நின்ற ஆலமரம் வீழ்ந்து விடுவ பறவைகள் நாம் நிழல் தேடி எங்கு செல்வோம் வடிக்கின்ற கண்ணீரில் கூட நாங்கள் காவியங்கள் படைத்திடுவோம்.

உங்கள் நினைவுகளை மீட்டுவதால் எங்கள் அன்பு தந்தையின் ஆத்ம சாந்திக்கு என்றும் எமது பிரார்த்தனை.

அன்பு மனைவி,
பாசமிகு பிள்ளைகள்.

மல்லாகம். (7617)

## 20-வது அகவை தினமும் 1ஆம் ஆண்டு நினைவு தினமும்



| அன்னை மடியில்: | இறைவனின் அணைப்பில்: |
|---|---|
| 29 — 08 — 1975 | 29 — 08 — 1993 |

### உருத்திராபதி உதயகுமார் (உதயன்)

எம்மண்ணில் உதித்த நிலவே!
அன்னியர் ஆதிக்க வெறியின்
கொடும் விமான குண்டு வீச்சினால்
உன் பிறந்த அகவை தினமன்று
எமையெல்லாம் தவிக்க விட்டு
பிரிந்து சென்று விட்டாய்
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
என்றும் உன் நினைவுகள் அழியா.

உன்பாசமுள்ள
— குடும்பத்தினர்

இராஜ வீதி,
கோப்பாய் தெற்கு. (32614)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஐ.தே.கவின் பகற் கொள்ளை!

சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையிலான புதிய அரசாங்கம் பதவியேற்று பதினொரு நாட்களே கடந்திருக்கின்றன. இந்த நாட்களில் பழைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் நிர்வாகத் திக்குமுக்கலான, பண மோசடிகள், நிதிக் கையாடல்கள் என்பன குறித்த தகவல்கள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன!

இத்தகைய மோசடிகளில் — திறைசேரியில் 8,000 கோடி ரூபா நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதும், 1,500 கோடி ரூபா கணக்குக் காட்டப்படாமல் செலவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்க மிகமிகப் பெரிய ஊழல் விவகாரமாகும்.

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 6,000 கோடி ரூபா துண்டு விழும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஐ.தே.க. அரசின் பெருச்சாளிகள் விழுங்கிய 6 000 கோடி ரூபாவும் திறைசேரியில் இருந்தால் துண்டு விழுதலைத் தடுத்து மக்கள் நலத்திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தியிருக்கலாம்!

நாட்டின் பிரதான பணப் பெட்டகம் திறைசேரியாகும். மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிகள் உட்பட வெளிநாட்டு உதவிகள் மற்றும் மூலதனங்கள் என்று நிதிவளங்கள் அத்தனையும் திறைசேரியிலேயே கையாளப்படுகின்றன.

அங்கேயே கோடிக் கணக்கான கணம், கணக்கு காட்டப்படாமல் செலவிடப்பட்டும், பற்றாக்குறை உண்டாகும் விதத்தில் ஒழுங்கு விதிகள், நடைமுறைகள், கட்டுப்பாடுகளை மீறி கையாளப்பட்டும் திருட்டுக்கள் நடந்திருக்கின்றன. பெரும் பகற்கொள்ளை நடாத்தப்பட்டுள்ளது

மக்களின் பணத்தை — தேசத்தின் நிதியை, அளந்தும் அளவோடும் செலவிட வேண்டிய திறைசேரியிலேயே, அதிகாரத்தில் இருந்தோர் கொள்ளை அடித்திருக்கிறார்கள் என்றால், வேலியே பயிரை மேய்ந்தது என்றால் —

ஏனைய பகுதிகள் — அமைச்சுகள் — நிறுவனங்கள் குறித்துப் பேசத் தேவையில்லை. அரசாங்க நிர்வாக அமைப்பின் எல்லா மட்டங்களிலும், மூலை முடுக்குகளிலும் பண மோசடி, ஊழல், பொதுச் சொத்துக் கொள்ளை என் "தண்ணீர் பட்ட பாடாக" இருந்திருக்கும் என்பதில் என்ன சந்தேகம்?

தேர்தல் காலத்திலேயே அவசர அவசரமாக, கடைசி நேரத்தில் 360 கோடி ரூபாவுக்கு பாவித்த, இனிமேல் உதிரிப்பாகங்கள் பெற முடியாத ஆயுதங்களும் இராணுவ தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன என்றால் —

பழைய ஆட்சியில் ஊழலும், மோசடியும், சுரண்டலும் எந்தளவுக்குத் தலைவிரித்தாடின என்று இலகுவில் புரிந்து கொள்ளலாம்;

மக்கள் பணம் தானே; கேட்க எவருமில்லை; யாரும் எந்தளவும் கொள்ளையடிக்கலாம்; அலுவலகச் சிற்றூழியர் முதல் அமைச்சுச் செயலாளர் வரை சிறிதாகவும் பெரிதாகவும் ஏப்பம் விட்டார். கேட்பவர்கள் யார்? இவர்கள் எல்லோருக்கும் மேலே உள்ள அமைச்சரே பொதுப் பணத்தைச் சுருட்டினால் மற்றவர்களைத் தண்டிப்பது எப்படி?

ஒரே கட்சி பதினேழு வருடங்கள் ஆட்சியில் இருந்ததால் ஊழலும் மோசடியும் எல்லா மட்டங்களிலும் பழகிப் பெருகியிருக்கும். அவற்றைச் செய்தவர்களைக் கண்டு பிடிக்கவும், தண்டிக்கவும் சந்திரிகா அரசுக்கு ஆறு வருடம் போதாதே!

முன்னர் குறிப்பிட்ட இரண்டு மோசடிகளும் ஜனாதிபதி பொறுப்பாக இருந்த நிதி அமைச்சிலும், பாதுகாப்பு அமைச்சிலும் நடந்தவை இவை குறித்து நாட்டுக்கும் மக்களுக்கும் பதில் சொல்ல வேண்டியவர் விஜேதுங்கவே!

சுறாக்கள் இருக்க இறால்களைப் பிடிக்காமல், சுறாக்களையே வலைக்குள் போட முயலும் சந்திரிகாவின் சாமர்த்தியம் குறிப்பிடத்தக்கதே!

ஆனால் இதே சுறாக்களும் இறால்களும் அவரது நிர்வாகத்தில் பிறக்காமல் பார்ப்பது தான் திறமை.

ஆட்கடத்தல் சம்பந்தமான

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடுக!

## மன்னிப்புச் சபை கோரிக்கை

கொழும்பு, ஓக. 29

பலாத்காரமாக ஆட்களைக் கடத்திக் கொண்டு போன சம்பவங்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை உடனே பகிரங்கமாக வெளியிடும்படி சர்வதேச மன்னிப்புச்சபை ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

இவ்வாண்டு மார்ச் 3 ஆம் திகதி வரை காணமற்போனவர்களில் 56 பேர் வரையான அறிக்கைகளை இந்த ஆணைக்குழு ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துவிட்டது.

1992இல் சர்வதேச மன்னிப்புச் சபைக் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்த பின்னர், இந்த ஆணைக்குழு ஆறு அறிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கைகள் நாடாளுமன்ற அறிக்கைகளாக வெளியிடப்படும் என மன்னிப்புச் சபைக்கு அப்போது உறுதி அளிக்கப்பட்டது.

எனினும் அவை வெளியிடும் திகதி அறிவிக்கப்படவில்லை. அறிக்கைகளை வெளியிடுவதற்கான உத்தரவை 1992 இல் ஜனாதிபதி பிறப்பிக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்று வரை அவ்வறிக்கையை வெளியிடும் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# மக்கள் அளித்த தீர்ப்பை தலை குனிந்து ஏற்கிறேன்

## குமார் பொன்னம்பலம் அறிக்கை

கொழும்பு, ஓக. 29

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பை தலை குனிந்து ஏற்றுக் கொள்வதாக இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது;

பல தரப்பட்ட பிரசாரங்கள், பிரச்சினைகள் மற்றும் வதந்திகளுக்கும் மத்தியில் அச்சமின்றி தமிழ் உணர்வுடனும் தன்மானத்துடனும் தமிழ் தனித்துவத்தை நிலைநாட்ட வாக்களித்த 9 ஆயிரத்து 251 தமிழ் வாக்காளர்களுக்கு தேர்தலில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு தலைவணங்குகின்றது.

ஏறக்குறைய ஒரு லட்சம் தமிழ் வாக்காளர்கள் இருந்தும் கூட தமிழர்களுக்கு தமிழர் பிரதிநிதித்துவமும் தனித்துவமும் தேவையில்லை என்பது தான் பெரும்பான்மை தமிழரின் விருப்பம் என்பதை இத்தேர்தல் நிரூபித்து விட்டது.

பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் வாழுகின்ற தமிழர்களுக்கு தங்களுடைய பல பிரச்சினைகளையும் அரசியல் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்த தமிழர் பிரதிநிதித்துவம் தேவை என்பதை நாம் வலியுறுத்திப் போட்டியிட்டோம்.

இதனை பேரினசக்திகளும், அவர்களின் தயவில் வாழ்ந்த, வாழ்ந்தகொண்டிருக்கும் ஒரு சில தமிழரும் இனவாதம் என்கின்றார்கள். இதனைப் பெரும்பான்மைத் தமிழர்களும் ஆதரிக்கின்றார்களா? இவ்வாறு குமார் பொன்னம்பலம் தமது அறிக்கையில் கேட்டிருக்கிறார்.

குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேச்சைக் குழு கடந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டது தெரிந்ததே.

# கூட்டுறவு இயக்கத்துக்கு புதிதாக சட்டம் வரும்!

## அமைச்சர் தொடங்கொட தகவல்

கொழும்பு, ஓக. 29

கூட்டுறவுச் சட்டவாக்கத்துக்குப் பதிலாக புதியதொரு சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்,

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் கூட்டுறவு அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்திருக்கிறார்:

நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் மேலும்திறம்படச் செயலாற்ற வசதியாக புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனசவியத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பயன்கிடைக்கவில்லை என்றும் எனவே அதனை மாற்றும் வகையில் அத்திட்டம் மீளபரிசீலனை செய்யப்படவிருப்பதாகவும் அவர் கூறினார். (எ-ஐ-6)

## தேர்தல் தினத்தன்று

# இராணுவப் புரட்சி நடத்த திட்டமிடப்பட்டிருந்ததாம்!

கொழும்பு, ஓக. 29

பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடை பெறுவதற்கு சற்று முன்னராக இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகள் திடீரென கொழும்பிலிருந்து இடம் மாற்றப்பட்டு வேறு இடங்களுக்கு பணிபுரிய அனுப்பப்பட்டனர் என்றும் —

நாட்டில் இராணுவ அதிரடிப் புரட்சி ஒன்று இடம் பெறலாம் என்ற தகவலின் பேரிலேயே அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர் என்றும் —

பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இராணுவ பொலீஸ் கொமாண்டர் அசோகா தொரதெனிய உட்பட பல மூத்த படை அதிகாரிகள் கொழும்பில் இருந்து போர் நடைபெற்று வரும் வடக்கு பகுதிக்கு இடம் மாற்றப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கும் இராணுவத்தளபதி ஜெரி டி. சில்வாவுக்கும் வழங்கப்பட்ட பலத்த பாதுகாப்பானது தேர்தலுக்காக அல்ல என்றும் —

இராணுவ அதிரடிப் புரட்சி நடைபெறலாம் என்ற தகவலின் காரணமாகத்தான் என்றும் — பெயர் கூற விரும்பாத சில அதிகாரிகள் தற்போது தெரிவித்திருப்பதாகவும் வெரித்தாஸ் வானொலியில் தெரிவிக்கப்பட்டது.

## ஜா-எல அசிட் வீச்சுச் சம்பவம்:

# முன்னாள் அமைச்சரை தேடுகின்றனர் பொலீஸார்!

கொழும்பு, ஓக. 29

தேர்தல் தினத்தன்று ஜாஎல பகுதியில் நடந்த அசிட் திராவக தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலீஸாரால் தேடப்பட்டு வரும் முன்னாள் அமைச்சரும் அவரது மெய்ப் பாதுகாவலர்களும் தலைமறைவாகிவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைக்கண்டு பிடிக்க கடந்த புதன்கிழமை பொலீஸ் குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த அசிட் திராவக தாக்குதலில் இன்ஸ்பெக்டர் சோமபால உட்பட ஏழுபொலீஸார் காயமடைந்தனர் என்றும் —

தேர்தல் காலத்தில் பொலீஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் இதுவே மோசமானது என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைமறைவான முன்னாள் அமைச்சர் மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர்களின் வீடுகள் பொலீஸாரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக ... கைது செய்... தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

## 'லேக்ஹவுஸ்' பற்றி லயனல் வழங்கிய உறுதி

அரசாங்கத்தின் ஊதுகுழலாக லேக்ஹவுஸ் பத்திரிகைகள் செயல்பட அனுமதிக்கப் போவதில்லை என்று அந்த நிறுவனத்தின் புதிய தலைவர் திரு. லயனல் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

பக்கசார்பின்றி செயல்படக் கூடியவர்களை நியமிப்பதற்குத் தாம் முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். செய்திகள் நம்பகத் தன்மை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-ஐ-6)

## இன்று

பலாலி ஆசிரிய கலாசாலை வணிக நெறி இறுதியாண்டு ஆசிரிய மாணவரை இன்று திங்கட்கிழமை காலை 8-15 மணியளவில் தட்டச்சுப் பயிற்சிக்காக கலாசாலைக்கு வருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க)

## விடைத்தாள்கள் திருத்தும் பணி

கடந்த 7 ஆம் திகதி நடந்த ஆண்டு ஐந்து புலமைப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை இது நீடிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## சோதிட மாநாடு

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் ஏற்பாட்டில், ஜோதிஷ விழிப்புணர்வு சோதிட மாநாடு எதிர்வரும் முதலாம் திகதி முழுநாள் நிகழ்வாக நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. (க)

## மக்கள் வங்கி வைபவம்

யாழ்ப்பாணம், ஓக. 29

மக்கள் வங்கியின் 500 ஆவது சுயதொழில் வாய்ப்புக் கடன் வழங்கும் வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரான்லி வீதி வங்கிக்கிளை அலுவலகத்தில் பிராந்திய முகாமையாளர் திரு. ஆர். எம். அருளானந்தன் தலைமையில் நடைபெறும். (க)

## ஈழத் தமிழ் சஞ்சிகைகள் கண்காட்சிக்கு

யாழ்ப்பாணம், ஓக. 29

ஈழத்து தமிழ்ச் சஞ்சிகைகளை வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதன் பொருட்டு ஈழத்து தமிழ் சஞ்சிகைகளுக்கு என தனியான கண்காட்சி — விற்பனைக்கூடம் ஒன்றை நல்லூர் திருவிழா சுற்றாடலில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அமைத்துள்ளது.

இதுவரை சஞ்சிகைகளை அனுப்பாதவர்கள் அவற்றைக் காட்சிக் கூடத்திற்கு அல்லது கந்தர்மடத்தில் அமைந்துள்ள 'நமகூரம்' அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

15 ஆம் நூற்றாண்டு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்தவர் எனக் கூறப்படுகின்றது.

மங்காத சிறப்பு

புகழுடன் விளங்கிய பொன்னாலையின் சிறப்பு இன்றும் மங்காது விளங்குதல் குறிப்பிடற்பாலது. அதன் அயலிலுள்ள திருவடி நிலை (ஸ்ரீபாதம்), ஜம்பு கோலமாய துறைமுகம், பறாளையிலுள்ள பிள்ளையார், முருகன் கோயில்கள், அங்குள்ள நேர்த்தியான சிற்பங்கள் அமைந்த தேர், வெள்ளரச மரம் முதலியன குறிப்பிடற்பாலன. பறாளையிலுள்ள மேற்குறிப்பிட்ட தேர் மரத்தினால் அமைக்கப்பட்டது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது; சமகாலத் தென்னிந்தியச் சிற்பக்கலை மரபினைப் பெருமளவு தழுவி அமைக்கப்பட்டது.

இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும் போது பொன்னாலையும் அதனை அடுத்த சில பகுதிகளும் புராதன வரலாற்று முக்கியத்துவமும், சிறப்பும் கொண்டவை என்பது தெளிவு.

இப்பகுதியில் உள்ள புராதன சின்னங்களைப் பாதுகாப்பதும், மேலும் இப் பகுதியிலே புதிய ஆய்வுகளை மேற்கொண்டு புதிய தகவல்களைப் பெற முயற்சிப்பதும் சாலச்சிறந்தது. பொன்னாலையின் சிறப்பைக் கூறும் "கடலோட்டு" என்னும் நூல் கிடையாதது போனது ... வது கிடைக்குமா? ... "பொன்னாலை மகாத்மியம்"

# நியாயமான தீர்வே இந்தியாவின் விருப்பம்

## சங்கர் தயாள்சர்மா தெரிவிப்பு

புதுடில்லி, ஓக. 29

தமிழர்களின் சட்டபூர்வ அபிலாஷைகளை ஐக்கிய இலங்கைக்குள் பூர்த்தி செய்யக் கூடியதாக நியாயமான தீர்வு காணப்படுவதே இந்தியாவின் விருப்பம் என்று இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா தெரிவித்தார்.

இந்தியாவுக்கான புதிய இலங்கைத் தூதர் பேர்னார்ட் திஸாநாயக்க நேற்று தமது நியமனப் பத்திரங்களை திரு. சர்மாவிடம் கையளித்தார்.

அது தொடர்பான வைபவத்தில் பேசியபோதே இந்திய ஜனாதிபதி முன்கண்டவாறு தெரிவித்தார். (இ-ஐ-எ)

இனப்பிரச்சினைக்கான

# அரசியல்தீர்வை அமுல்நடத்த படையினர் உதவ வேண்டும்

## தளபதிகளை அமைச்சர் கோருகிறார்

யுத்தம் புரிவது மட்டும் ஆயுதப் படையினரின் கடமையல்ல; இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட்டால் அதனை முறையாக அமுல்படுத்த ஒத்துழைப்பு நல்குவதும் படையினரின் கடமையாகும்.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை முன்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண உதவும்படியும் அவர் படைத்தளபதிகளைக் கேட்டுக்கொண்டார்.

ஆரம்பத்தில், யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்காக இரு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. (எ-6)

# புத்தூர் சிறுப்பிட்டி தெற்கு கிராமியப் பாசறை நிகழ்ச்சி

புத்தூர் சிறுப்பிட்டி தெற்கு கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்ச்சி உதயதாரகை மன்றத்தில் இன்று (திங்கள்) பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும்.

இந் நிகழ்ச்சியில் வலி. கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு திருக்குமரன் தேசியக் கொடியை ஏற்ற, கிராமியப் பாசறை இணைப்பாளர் திரு. ரூபன் விளையாட்டுகளை ஆரம்பித்து வைப்பார். மாலை 4 மணிக்கு கைத்தறி நெசவுப் பயிற்சி நிலையத்தை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி திறந்துவைப்பார்.

உதயதாரகை மன்றத்தைச் சேர்ந்த திரு. பரமசாமி தலைமையில் நடைபெறும் இரவு நிகழ்ச்சியில் கருத்துரைகள், சிறுவர் பூங்கா மாணவர்களின் கவிதை, கரகம், கும்மி, கலை பண்பாட்டுக் கழகத்தின் நாடகம் ஆகியன இடம்பெறும். (ஏ)

# வட-கிழக்கு ஆளுநர் பதவி

## மைத்திரி ஏற்க மறுத்தார்

கொழும்பு, ஓக. 29

திரு. மைத்திரிபால சேனநாயக்கா வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை ஏற்க மறுத்ததை அடுத்தே அவரை வடமத்திய மாகாண ஆளுநராக பிரதமர் சந்திரிகா நியமித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு. மைத்திரிபால சேனநாயக்காவுக்கு இடமளிப்பதற்காக வடமத்திய மாகாண ஆளுநர் பதவியை திரு. ஈ.எல். பி. ஹுருள்ளே விட்டுக் கொடுக்க முன்வந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் தோல்வியுற்ற

# ஐ. தே. கவைப் பலப்படுத்த காமினி-ரணில் கூட்டுமுயற்சி

கொழும்பு, ஓக. 29

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற ஐ.தே.கவை ஒழுங்கு படுத்தி, கட்சியைப் பலப்படுத்தும் விசேட நடவடிக்கைகள் அடுத்த இரு வாரங்களில் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் —

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா, ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரின் தலைமையில் இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். என்றும் —

ஐ.தே.க. தலைமையகப் பேச்சாளர் ஒருவர் "லங்காதீப" பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

கிராமங்கள் தோறும் நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடி உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் கூட்டங்களை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இந்நடவடிக்கையின் நோக்கம் என்றும் —

அடுத்த ஒரு சில மாதங்களில் சுமார் ஒரு லட்சம் உறுப்பினர்களை கட்சியில் சேர்த்துக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (உ-ஐ-6)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 1ஆம் திகதி காலை 9 மணிக்கு பிரதேசக் கல்விப் பணிமனைத் திணைக்களத்தில் நடைபெறும். (ஏ)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி பதினெட்டாம் நாளான இன்று திங்கட்கிழமை ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு.

நாவலர் மணிமண்டபம் முன்றிலில் தெய்வீக இசையரங்கு

மாலை 6 – 7 மணி வரை பிரசாந்தி இராமச்சந்திரன் பாட்டு 7 - 8-30 வரை டாக்டர் சி.சேகரதரன், வீ. கே. பஞ்சமூர்த்தி ஆகியோரின் புல்லாங்குழலிசை.

தித்திக்கும் முத்தமிழ் அரங்கில்

இரவு 8-30 மணி முதல் — "ராஜன்ஸ்" குழுவினரின் "இன்னிசை கானம்."

நல்லை ஆதீனத்தில்

காலை 9-30 மணி- சமய தீட்சை மாலை 2 மணி-சமயப் பேருரை மாலை 3 மணி-புராணப் படிப்பு மாலை 4 மணி- யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் இசை நிகழ்ச்சிகள் மாலை 6 - 7மணி வரை பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தியின் கந்தரனுபூதி தொடர் இசைப் பேருரை.

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில்

மாலை 5 - 30 மணிக்கு சம்பூர்ணராமாயணம் தெய்வீக இசைப்பேருரை பிரம்மஸ்ரீ சிவ.லை நித்தியானந்த சர்மா. (ஏ-30-111)

## ஆலயங்களில்

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் நாளை (செவ்வாய்) முற்பகல் 9-30 மணிக்கு ஸ்ரீ ரங்கநாதர் திருவடிப் பூசையும் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு வைரவர், ஆஞ்சநேயர் பொங்கல் பூசையும் பிற்பகல் 3 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும். (ஐ-க-13-51)

★ ★ ★

செல்வபுரம் நடேசன் புளியடி முருகமூர்த்தி ஆலயம், உடுவில் ஞானவைரவர் ஆலயம் ஆகியவற்றில் இன்று திங்கட்கிழமை கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நடைபெறும். (க-173-68)

★ ★ ★

ஆனைக்கோட்டை நாவலடி வைரவர் சுவாமி தேவஸ்தான வருடாந்த உற்சவம் எதிர்வரும் செப்டம்பர் 2ஆம் திகதி பிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா 10ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 11ஆம் திகதியும் இடம்பெறும். திருவிழா நாட்களில் தினமும் இரவு7-8மணி வரை திரு செ சத்தியமூர்த்தி சமயச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ஏ)

★ ★ ★

வடகோவை ஸ்ரீசக்ராம்வாரி ஆலயத்தின் உறியடி உற்சவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறும். (ஏ)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலய தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறும். தேர்த் திருவிழாவுக்கு வரும் அடியார்களுக்கு தாகசாந்தி செய்ய பொன்னாலை கண்ணன் தண்ணீர்ப் பந்தல் சேவை நிலையத்தினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (க-28)

★ ★ ★

நேற்று ஆரம்பமாகிய தாவடி வடக்கு ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் 12 தினங்கள் நடைபெறும். திருவிழாவில் தினமும் இரவு 8- 9 மணி வரை திரு. எம். எஸ்.ஸ்ரீதயாளனின் சமயச் சொற்பொழிவு இடம் பெறும். (க-68)

★ ★ ★

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் 21 ஆவது கிருஷ்ண ஜெயந்தி விழா இன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.

நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் தரிசனமும் பின்னிரவில் உறியடி உற்சவமும் இடம் பெறவுள்ளன.

விழாவில் பட்டி மண்டபம் புராண இசை நாடகம் என்பனவும் நடைபெறவுள்ளன. (ஐ-30-173)

★ ★ ★

கோற்றாவத்தை கண்ணன் கோவில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. (ஐ-178)

# இரத்தினபுரியின் முன்னாள் மேயரை தேடி வேட்டை

கொழும்பு, ஓக. 19

தேர்தல் காலத்தில் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் சிலரைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக தலைமறைவாகியுள்ள இரத்தினபுரி மாநகர சபையின் முன்னாள் மேயர் மகிந்த இரத்னதிலகாவைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை இரத்தினபுரிப் பொலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அவர் எங்கு இருக்கிறார் என்பதைத் தங்களால் கண்டுபிடிக்க முடியாது இருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீ.ல.சு.கட்சியில் போட்டியிட்டு மேயரான திரு. இரத்னதிலக பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார். கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றதை அடுத்து இவர் மேயர்பதவியை ராஜினாமாச் செய்தார். (உ-எ)

## முட்டை விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணத்தில் முட்டை விலை 4.00 ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது. (இ-17-4-13-100)

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## நின் பொற்றாள் சரணம்!

கந்தனென்று வந்தே கரங்குவித்து வணங்கினேன்
கலியுக வரதா நின் பொற்றாள் சரணம்!
எந்தனது வினையெல்லாம் எளிதிலே அகற்றிடுவாய்
ஏனிந்த மௌனமையா ஏழைகள் என்செய்வோம்?
உந்தனது நாமமென்றும் என் நாவிலினிக்குதையா!
வேறு கனைந்தே உம்மின்னருளைத் தாருமையா!
வந்தனை செய்தே துதித்தேன் வரமீந்திட வேண்டும்
வண்ணமயில் வாகா ஓடி வந்தென்னை யாள் வாயே!

-இராசையா ஸ்ரீதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் பற்றி விசாரிக்க 3 ஆணைக்குழுக்கள்

கொழும்பு, ஓக. 29

அரசியல் கொலைகள் மற்றும் ஆட்கள் காணாமற்போன சம்பவங்கள் பற்றி விசாரிக்க மூன்று ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவிருக்கின்றன.

ஒன்று, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களை விசாரிக்கும் என்றும் —

இரண்டாவது ஆணைக்குழு வட மத்திய, வடமேற்கு மாகாணங்களில் இடம்பெற்ற சம்பவங்களை விசாரிக்கும் என்றும் —

எம்பிலிப்பிட்டிய உட்பட தென் மாகாணத்தில் இடம்பெற்ற சம்பவங்களை மூன்றாவது குழு விசாரிக்கும் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆணைக்குழுவிலும் மூன்று உறுப்பினர்கள் இருப்பர். 4 மாதங்களுள் இவை விசாரணைகளை நடத்தி முடிக்கும். ஒவ்வொரு சம்பவம் குறித்தும் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கும்படி இந்த ஆணைக்குழுக்கள் கேட்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

ஆணைக்குழுக்களின் முதல் பணி, காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதாகும். இரண்டாவது கடமை பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (உ-எ)

## தனித்துப் போட்டியிட விரும்பும் டி.பி

கொழும்பு, ஓக 29

கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு, பொது வேட்பாளராக ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் விருப்பத்தை திரு. டி.பி. விஜேதுங்கா வெளியிட்டிருக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை தம்மை சந்தித்த நண்பர்களிடம் ஜனாதிபதி விஜேதுங்க இவ்விருப்பத்தை வெளியிட்டார். (ஐ-எ)

## பௌத்தர்கள் மட்டுமல்ல

# ஏனைய சமூகத்தவர்களும் எங்களை நம்பியுள்ளனர்

### கண்டியில் பிரதமர் பேச்சு

கொழும்பு, ஓக. 29

இந்த நாட்டில் வாழும் பௌத்த மக்கள் மட்டுமல்லாது ஏனைய சமூகத்தினரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மீது பாரிய நம்பிக்கையையும் மதிப்பையும் வைத்திருக்கிறார்கள்.

பிரதமர் சந்திரிகா கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்:

"மானிட பண்புகள் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும் உலகம் முழுவதும் பாராட்டிய எமது நாட்டின் நாகரிகப் பண்புகள் தழைத்தோங்க வேண்டும். இவற்றைச் செய்து முடிப்பதே எமது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்'' —என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது; எமது ஆட்சியில் நீதி சமத்துவம், நேர்மை நிலைநாட்டப்படும். அபிப்பிராய பேதங்களுக்கு இடம் கொடுக்காது மக்களுக்கு பணியாற்றுவதே எமது அரசின் ஒரே நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்;

பௌத்த சமய வளர்ச்சிக்கு உதவும் அதே வேளையில் ஏனைய சமயங்களின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் தேவையான நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்றும் அவர் உறுதி கூறினார்.

கண்டி தலதா மாளிகையில் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களைத் தரிசித்து, ஆசிபெற்றுக் கொண்ட பின்னர் அவர் அந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினார். அப்போதே அவர் முன்கண்ட தகவல்களை வெளியிட்டார். (எ-4)

# வறுமை நிவாரணம் புதிய திட்டம் வரும்

கொழும்பு, ஓக 29

விரிவுபடுத்தப்பட்ட வறுமை நிவாரணத் திட்டம் ஒன்று புதிய அரசினால் கொண்டு வரப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பிரதமர் சந்திரிகா இது தொடர்பான யோசனைகளைச் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனசக்தி உதவிபெறுவோர், இந்த உதவியைப் பெறாதோர் ஆகியோர் மத்தியில் இருந்து வறுமை நிவாரணம் பெறுவதற்கு தகுதியான குடும்பங்களை இனங்கண்டு தெரிவு செய்வதற்கு ஏதுவாக மூன்று மாத கால ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்புதிய திட்டத்தின்கீழ் மாதம் ஆயிரத்து 500 ரூபா வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வறுமை நிவாரணம் வழங்கப்படும்.

புதிய வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. (எ-4)

# சாய்ந்த மருதுப் பகுதியில் தொடர் குண்டு வெடிப்பு

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் மூன்று குண்டுகள் வெடித்தன. இதனால் ஒரு கடையும், இரு வீடுகளும் சேதமுற்றன. எவரும் காயமடையவில்லை.

சாய்ந்தமருது பிரதான வீதியில் உள்ள புடைவைக்கடை ஒன்றின் முன்னாலும்—

6 ஆம் குறிச்சியில் உள்ள இரு வீடுகளுக்கு முன்னாலும்— இக்குண்டுகள் வெடித்தன.

தேர்தல்கால பகைமையே இக்குண்டு வெடிப்புகளுக்குக் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் கருத்து வெளியிட்டனர். (உ-3)

# கொழும்புத் தமிழர்களை சாடுகின்றார் குமார்!

கொழும்பு, ஓக 29

வெற்றிகரமான தமிழ் அரசியல்வாதியாக விளங்க நீலன் திருச்செல்வம் போன்று அலெக்ஸ் தேவானந்தா போன்று என்னால் அரசியல் நடத்தமுடியாது!

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஒரு லட்சம் தமிழர்கள் மரத்தைச் சுற்றிப்படரும் கொடிகளாக வாழ விரும்புகின்றனர்! அவர்கள் நீரைப்பார்த்த முட்டாள்களாகி விட்டனர் என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

''வெள்ளவத்தைத் தமிழருக்கு என்ன நடந்துவிட்டது? ஐ.தே.கவினால் உதைக்கப்படுவதற்காக கொடிகளாக வாழ விரும்பி வாக்களித்தார்களா? அல்லது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினால் கூறப்படும் புதிய நிர்வாக அலகுகள் என்ற கானல் நீருக்கும், புது முகங்களுக்கும் வாக்களித்தார்களா?,, — இவ்வாறு அவர் ''சண்டே டைம்ஸ்'' செய்தியாளரிடம் கேட்டார்.

குமார் பொன்னம்பலத்தின் அறிக்கை ஒன்று ஐந்தாம் பக்கத்தில் பிரசுரமாகிறது.

# இந்து சமய வினா - விடை போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 29

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை, இந்து சமய வினா விடைப் போட்டி ஒன்றை நடத்துகிறது.

பத்தொன்பது வயதுக்கு உட்பட்டவர்கள் பங்குபற்றக் கூடிய இப்போட்டியில் பரிசில்கள் பெறுவோருக்கு தங்க, வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.

போட்டி முடிவு திகதி இம்மாதம் 31 ஆம் திகதியாகும். போட்டிக்குரிய வினாப் படிவம் 24-08-94 ஆம் திகதிய உதயனில் வெளியானது. [அ]

# நினைவுக்கல் நடுகல்

கடந்த 23 ஆம் திகதி பூநகரிப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த வேங்கைகள் நால்வரின் உருவப்படபவனியும் நினைவுக்கல் நடுகையும் இன்று நடைபெறவுள்ளன.

மேஜர் சேரலன் [ஐயாத்தம்பி குகேந்திரன் — எழுதுமட்டுவாள்], லெப்டினன்ட் புதியவன் அல்லது ரமேஷ் [கந்தசாமி முருகதாஸ் — மீசாலை] ஆகிய இருவரது உருவப்படங்களும் அவர்களது இல்லங்களில் இருந்து இன்று பிற்பகல் 2 மணிக்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் இடம்பெறும் வீரவணக்க கூட்டத்தைத் தொடர்ந்து உருவப்படங்கள் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவுக் கற்கள் நாட்டப்படும்;

கப்டன் அன்பரசன் அல்லது குணசீலன் (மயில்வாகனம் சற்குணராசா - மட்டக்களப்பு), கப்டன் ஜெயகாந்தன் அல்லது ஜீவக்குமார் (கோபாலபிள்ளை சுதாகரன் - அம்பாறை) ஆகிய இருவரது உருவப்படங்கள் இன்று முற்பகல் 9 மணிக்கு நீர்வேலி தீன் நர் யாவீரர் மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் அங்கு வீரவணக்க கூட்டம் நடைபெறும். தொடர்ந்து உருவப்படங்கள் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதைகளுடன் அங்கு நினைவுக்கற்கள் நடப்படும். (ஐ)

# மண்டைதீவிலிருந்து படையினர் வேட்டு!

யாழ்ப்பாணம், ஓக. 29

மண்டைதீவுப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கிப் பலத்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இத்தாக்குதல் நள்ளிரவு வரை தொடர்ந்து நடத்தப்பட்டது.

நேற்று முற்பகல் 9-30 மணியளவில் காரைநகர் திருவடிநிலைக் கடற்பகுதியில் இருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தினர். (ஐ-15-51)

# பாதுகாப்பு அமைச்சில் சில மாற்றங்கள் வரும்

### கேணல் ரத்வத்த தகவல்

கொழும்பு, ஓக. 29

பாதுகாப்பு அமைச்சு உயர் மட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொள்வது குறித்து தான் ஆலோசனை செய்து வருவதாக பாதுகாப்பு பிரதி அமைச்சரும், நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

★ பொதுத் தேர்தல் காலத்திலும் அதற்கு பின்னரும் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்த பொலீஸார் பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளின் குழு ஒன்று அமைப்பதற்கு ஜனாதிபதி அனுமதி அளித்திருக்கிறார்.

குற்றவாளியாக காணப்படும் பொலீஸ் அதிகாரிகள், பொலீஸ்மா அதிபரால் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று திரு. அனுருத்த ரத்வத்த கூறினார்.

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்தும் பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-34)

# ஐ.தே.கவிலிருந்து விலக சிறிசேன கூரே முடிவு?

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச் செல்ல ஆரம்பித்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் அவர் பங்குபற்ற மாட்டார் என்றும் —

அவரில்லாததை ஐக்கிய தேசியக் கட்சியினர் அப்போது தான் உணருவர் என்றும் ஐ.தே.க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி ரணிலுக்குக் கிடைத்திருப்பின் சிறிசேன கூரே கட்சியில் தொடர்ந்து இருந்திருக்கக் கூடும் என்றும் அவர் கூறினார். (எ)

# வடக்கு வலய பாடசாலைகள் வியாழனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். கல்வி வலயம் 2 இல் (வடக்கு கல்வி வலயத்தில்) உள்ள பாடசாலைகள் அனைத்தும் முன்னர் திட்டமிட்டபடி எதிர்வரும் வியாழக்கிழமை முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று தெற்கு வலய பணிப்பாளர் திரு க. கந்தசாமி அறிவித்திருக்கிறார்.

ஜி.சீ.ஈ (உயர்தரப்) பரீட்சை நடக்கும் பாடசாலைகளில் மட்டும் முதலாம் திகதியன்று வகுப்புக்கள் நடைபெறமாட்டா. எனவே அன்றைய தினம் அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பாடசாலைக்கு சமுகம் தரத் தேவையில்லை என்றும் —

ஆனால் ஆசிரியர்கள் சமுகம் தரவேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். [உ]

### பளையிலும் முதலாம் திகதி ஆரம்பம்

தென்மராட்சி, ஓக. 29

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் என கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் அறிவித்துள்ளார்.

இப்பாடசாலைகள் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (உ-117)

# 8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய் 'மாஹோ' கப்பலில் வரும்

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துக் கொண்டு இவ்வாரம் கொழும்பு திரும்பவுள்ள 'மாஹோ' கப்பல் 8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயை ஏற்றிக்கொண்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

ஒகஸ்ட் மாத கோட்டாவான — 8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயே இக்கப்பலில் எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — யாழ். மாவட்டத்தில் உள்ள ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொருள்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐ.தே.க. அரசின் ஊழல்கள்: புதிய பிரதமர் வெளியிடுவார்

கொழும்பு, ஓக. 29

முந்திய அரசின் கீழ் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் பற்றிய விவரங்களை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா விரைவில் நாட்டு மக்களுக்கு தெரிவிக்க இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்

கடந்த சில தினங்களாக நிதி அமைச்சிலும், வர்த்தக அமைச்சிலும் பிரதமர் சந்திரிகாவும் அமைச்சர் கிங்ஸிலி விக்கிரமரத்தினாவும் நடத்திய தீவிர விசாரணைகளின் போது பல கோடி ரூபா பணம் அங்கீகாரமின்றி செலவழிக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# கதிர்காமரின் ஆலோசகராக காமினி கொரியா

கொழும்பு, ஓக. 29

புதிய வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் சிரேஷ்ட ஆலோசகராக டாக்டர் காமினி கொரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் கொரியா 1991 இல் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவினால் நியமிக்கப்பட்ட வெளியுறவு ஆய்வுக்குழுவின் தற்போதைய தலைவராக இருக்கிறார். இவர் 1974 முதல் 1984 வரை ஐ.நா. வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மாநாட்டின் செயலாளராகக் கடமையாற்றினார். (ஒ-எ)

# முன்னாள் அமைச்சரின் செயலர் தேடப்படுகிறார்

கொழும்பு, ஓக. 29

கப்பஹா பொலீஸாரினால் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகள் வழங்கப்பட்ட விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஒருவரின் அந்தரங்கச் செயலாளரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் விசேட பொலீஸ் குழு ஒன்று ஈடுபட்டுள்ளது

இதனிடையில் பொலீஸார் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களிடம் இருந்து இரண்டு ரிப்பீற்றர் ஷொட்கன்களை கைப்பற்றியுள்ளனர். இதுபோன்ற எத்தனை ஆயுதங்கள் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு ரகசியமாக வழங்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டுபிடிக்க பொலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## டாக்டர் விஜேசேகராவை நீக்கி விட்டு

# காமினியின் உறவினரை செயலாளராக்க முயற்சி!

கொழும்பு, ஓக. 29

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளராக உள்ள டாக்டர் காமினி விஜேசேகராவை நீக்கிவிட்டு அப்பதவிக்கு காமினி திசநாயக்காவின் உறவினரான டாக்டர் விக்கிரம வீரசூரியாவை நியமிக்கும் முயற்சியில் ஐ.தே.கவுக்குள் ஒரு குழுவினர் ஈடுபட்டு வருவதாக ''லங்காதீப'' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் தோல்வியைச் சந்தித்தபின் ஐ.தே. கட்சிக்குள் உட்பூசல்கள் அதிகரித்துள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது;

## இப்போது திருப்தியாம்!

# இவ்வுலகை விட்டுப் பிரிய தயாராக உள்ளார் சிறிமா

''மகள் சந்திரிகாவை பிரதமராகப் பார்த்து விட்டேன். இனி இவ்வுலகை விட்டு பிரிந்து செல்ல நான் தயாராக இருக்கின்றேன்.''

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ''சண்டே டைம்ஸ்'' செய்தியாளரிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''சந்திரிகா புத்திசாலித்தனமாக நாட்டை ஆட்சி செய்வார். அவருக்கு தேவையான ஆலோசனைகளை நான் வழங்குவேன். சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ போன்று நான் பணிபுரிவேன் —'' என்று கூறினார் அவர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா? என்ற கேள்விக்கு —

''நான் உயிருடன் இருப்பின் போட்டியிடுவேன் —'' என்றார் அவர்.

''ஏன் இப்படி மனம்தளர்ந்து பேசுகிறீர்கள்?'' என்ற கேள்விக்கு —

77 வயதான சிறிமாவோ, ''இவ்வுலகில் ஒன்றுமே நிரந்தரம் இல்லை என்று பௌத்தம் உபதேசிக்கிறது. இந்த உலகில் இருந்து விடுபட்டு மறு உலகு செல்வதை பற்றி என் சிந்தனை சில சமயம் செல்கிறது.

'எனது வாழ்க்கை பூரணத்துவம் நிறைந்ததாக — திருப்தியுள்ளதாக — அமைந்து விட்டது. எனது மகளை பிரதமராக பார்த்து விட்டேன். இதனை விட வேறென்ன எனக்கு வேண்டும்? இன்று என் கணவர் உயிருடன் இருப்பின் எவ்வளவு சந்தோஷம் அடைந்திருப்பார் —'' என்றார்.

நாட்டு மக்களுக்கு விடுக்கும் செய்தி என்ன?— என்ற கேள்விக்கு.

வடக்கு-கிழக்கு பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்று நம்புகின்றேன். மக்கள் இன, மத பேதமின்றி அமைதியாக வாழ வேண்டும் இதுவே எனது பிரார்த்தனை —'' என்று சிறிமாவோ கூறினார்.

அமைச்சு குறித்து ஒதுக்கப்படாத அமைச்சராக இருந்து பொது பணிபுரியும் சிறிமாவோ, தாம் அமைச்சருக்குரிய சம்பளம் மற்றும் வசதிகளைப் பெறப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

### தெற்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணி சனது தேர்தல் பிரசாரத்தில்போது கூறி வந்தது குறிப்பிடத்தக்கது.

மா விலை குறைக்கப்பட்டிருப்பதால் மாவினால் தயாரிக்கப்படும் பொருள்களின் விலையும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை

கிலோ 40 ரூபா வீதம் விற்கப்பட்டு வந்த மைசூர் பருப்பும் விலை குறைக்கப்பட்டிருக்கிறது பருப்பின் புதிய விலை கிலோ 22 ரூபாவாகும். [உ க-4]

### அமைச்சர்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்தன. சாதாரண எம்.பியாகத் தாம் தொடர்ந்து பணிபுரியப்போவதாக அவர் அறிவித்துள்ளார்.

இதனிடையில் —

பிரதமருக்குக் கீழ் வரும் அமைச்சுக்களில் ஒன்றுக்கு பிரதி அமைச்சராக ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நியமிக்கப்படவுள்ளார். திரு எம்.பி. கிரியெல்ல [illegible] துறைக்கு பிரதி [illegible] நியமிக்கப்படவிருக்கிறார். (உ-எ)

### சர்வசன...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதால் —

எனவே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் அனுமதியையும், சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியையும் பெறுமாறு நீதிமன்றம் உத்தரவிடக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-3)

### ஜனாதிபதித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

பொதுத் தேர்தல் முடிந்து ஒரு வருட காலத்துக்குள் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என்பதும் —

ஆனால் ஒரு வருட காலத்துக்குள் நாடாளுமன்றம் தனியாக இதற்கென பிரேரணை ஒன்றை நிறைவேற்றினால் [illegible] ஜனாதிபதி தேர்தலை நடத்தக் [illegible] முடியும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-3)

### ஜனாதிபதித் தேர்த...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில் பரவலாக கட்டியெழுப்பக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று முன்னணியின் பொதுச் செயலாளர் ஆரிய புலேகொட தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது பற்றிய நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ள சமயத்தில் முற்போக்கு முன்னணியின் அறிவிப்பு வெளியாகியுள்ளது (உ-எ)

### பொருளாதாரத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசு விரும்புவதாக பாதுகாப்புப் பிரதி அமைச்சரும், நீர்ப்பாசன, எரிபொருள் மின் சக்தி அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்தை அண்மையில் பகிரங்கமாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு உத்தேசித்திருந்தாலும் —

பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியே அதற்கான உத்தரவை பிரகடனப்படுத்த வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி விஜேதுங்க வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு முட்டுக்கட்டை போடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சிக்கல் நிலை குறித்து நாளை மறுநாள் புதன்கிழமை நடக்கும் வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்துக்கு ஜனாதிபதியே தலைமை வகிப்பார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து சமரசமாக முடிவு எதுவும் எடுக்கப்படாவிட்டால், வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் ஏ.எவ்.பி செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது (க-எ-6)

மரண அறிவித்தல்

நயினாதீவு

வேலுப்பிள்ளை செல்லத்துரை

(உரிமையாளர் நெக்ராகபே வவுனியா)

கொட்டடி சீனிவாசன் வீதியில் வசித்த நயினாதீவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் ஞாயிறு காலை வவுனியாவில் காலமானார்.

இவர் யோகலட்சுமியின் அன்புக் கணவரும், ஆசிரியைகள் மஞ்சுளா, நளினி (கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), பரதன், கிருதாஸ் (லண்டன்), வித்தியரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானப்பிரகாசம் (அதிபர், இளமருதங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை செமடுக்குளம்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30-08-94) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

சி. ஞானப்பிரகாசம்.

(மருகர்)

பண்டாரிக்குளம்,

வவுனியா.

[32617]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 29 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org